விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812
(C-3075)




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 21 வியாழக்கிழமை (05.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

# புலிகளின் காலத்தில் தமிழர் பாதுகாப்பாக இருந்தார்கள்

## உண்மையை கூறுவதனால் நாங்கள் பயங்கரவாதிகள் இல்லை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

புலிகளின் காலத்தில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்ற உண்மையை கூறுவதனால் நாங்கள் எவரும் பயங்கரவாதிகள் ஆகிவிடமுடியாது என முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் எமது உரித்து மற்றும் பாதுகாப்பு பற்றி பேசும்போது எம்மை தீவிரவாதிகள் என்று அழைப்பதை நிறுத்துமாறு தென்பகுதியினருக்கும் எச்சரித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## விஜயகலா மீது விசாரணைக்கு

### பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிற்கு எதிரான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் நேற்று புதன் கிழமை பணிப்புரை விடுத்துள்ளார். 24☛

## யாழ்.பொலிஸாரின் விடுமுறை இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை நேற்று முதல் இரண்டு வாரங்களுக்கு இரத்து செய்யப்பட்டுள்ளது.

வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரால் இந்த நட 24☛

## விஜயகலாவுக்கு எதிரான நடவடிக்கை ஜனநாயகத்தினை மீறும் செயற்பாடு

### மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன்



(யாழ்ப்பாணம்)

விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஜனநாயகத்தினை மீறும் செயற்பாடாக இருப்பதுடன், ஒரு பெண் அரசியல்வாதியை திட்டமிட்டு நசுக்குகின்ற முயற்சியே என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உரையினை 24☛

## இருவேறு இடங்களில் வாள்வெட்டு குழு தாக்குதல்

### மாணவன் உட்பட இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மற்றும் குப்பிளான் ஆகிய இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுக் கும்பலின் வன்முறைகளில் காயமடைந்த மாணவன் உள்பட இருவர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் மேற்கு பகுதியில் வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் 8 மணியளவில் புகுந்த இருவர், குடும்பத் தலைவரை கூரிய ஆயுதங்களால் தாக்கிக் காயப்படுத்தி 24☛

## விஜயகலாவின் உரைக்கு கைதட்டிய அரச உத்தியோகத்தர்களை விசாரிக்க அரச அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள் அநாகரிகமாக நடந்து கொண்டனர்.

அது தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தலை யாழ்.மாவட்ட செயலர் வழங்கியுள்ளார். 24☛

## முதல்வர் விக்னேஸ்வரனுடன் பேசத் தயாராகவுள்ளேன்

### பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை நிறுவுவது தொடர்பாக வடமாகாண முதலமைச்சருடன் பேசுவதற்கு தயாராகவுள்ளேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று பிரதமர் மீதான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்ட 23☛

### மின் இணைப்பு பொருத்தி

## வவுனியா இளைஞன் கின்னஸ் சாதனை

(குருமன்காடு)

வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மல்ரி பிளக் (நீள் மின் இணைப்பு பொருத்தி) ஒன்றை தயாரித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். 23☛

## கருணாவிற்கு பிரதி அமைச்சு கொடுத்தவர்கள்; விஜயகலா பற்றி பேச தகுதியற்றவர்கள்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பம் விளைவித்தவர்கள், அன்று பொலிஸாரைக் கொன்ற கருணாவிற்கு பிரதி அமைச்சு பதவி வழங்கியவர்களே என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன் கிழமை இடம் பெற்ற நாடாளுமன்ற அமர் 23☛

## எமக்கு புனர்வாழ்வு அளிக்க விரும்பும் ரஞ்சன் வடக்குக்கு வரவேண்டும் : விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எமக்கு புனர்வாழ்வு அளிக்க விரும்பும் ரஞ்சன் ராமநாயக்க வடக்குக்கு வரவேண்டும் என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர், யாருக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என அவர் முன் மக்கள் முடிவு செய்து கொள்வார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் வாராந்த கேள்வி பதிலில் விக்னேஸ்வரன். 23☛

## விஜயகலாவுக்கு எதிரான நடவடிக்கை

### சபாநாயகர் நேற்றும் அறிவிப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், விடுதலை புலிகளுக்கு ஆதரவாக தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து குறித்து கட்சித் தலைமைக்கு அறிவித்து, சட்டமா அதிபரின் ஆலோ 23☛

## தமிழர் ஏதாவது கூறினால் மட்டும்தான் பிரச்சினையா? கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் ராஜித சேனாரட்ன



(கொழும்பு)

ஹிட்லர் தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டபோது அமைதியாக இருந்தவர்கள், தமிழர்கள் ஏதாவது கருத்தைக் கூறினால் மட்டும் எதிர்ப்புக்களை வெளியிடுகின்றார்கள் என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு, நேற்று புதன் கிழமை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 02☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**மெகா பவர்**
திகதி 04/07/2018
சீட்டிழுப்பு இலக்கம் 248
வெற்றி எழுத்து N | சுப்பர் இலக்கம் 02 | வெற்றி இலக்கங்கள் 08 30 43 53
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி 2018-07-04
சீட்டிழுப்பு இலக்கம் 18
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 24 25 30 70
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 04-07-2018
சீட்டிழுப்பு இலக்கம் 853
ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கங்கள் 7 8 1 0 3 3
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2018.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 1810
ஆங்கில எழுத்து N | வெல்லப்பட்ட இலக்கங்கள் 29 49 70 74
தேசிய லொத்தர் சபை

# தமிழர் ஏதாவது கூறினால்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் கருத்துத் தொடர்பாக அரசாங்கத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாட்டில் ஒருபக்கம் ஹிட்லர் ஒருவர் வேண்டுமென கூறும் போது மறுபக்கத்தில் பிரபாகரன் வேண்டுமென்கின்றனர். எவ்வாறாயினும் அமைச்சர் விஜயகலாவின் குறித்த கருத்துத் தொடர்பாக பிரதமரும் ஜனாதிபதியும்தான் தீர்மானிப்பார்கள். அவர் பேசினார் என்பதற்காக ஒரேடியாக நடவடிக்கை யெடுத்துவிட முடியாது.

அதனை ஆராய வேண்டும். இந்த விடயத்தில் அரசியலமைப்பில் காணப்படும் சரத்துக்களை அடிப்படையாக கொண்டே நடவடிக்கையெடுக்க வேண்டும். அவரின் அந்த கருத்து தவறானது என்பதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

அதேபோன்று ஹிட்லர் தொடர்பாக பேசியதும் தவறானதே. சிலருக்கு ஹிட்லரை கொண்டு வருவதில் பிரச்சினையில்லை. ஆனால் பிரபாகரனை கொண்டுவருவதில் மாத்திரம்தான் பிரச்சினையாக இருக்கின்றது. ஹிட்லர் வேண்டுமென கூறும் போது பார்த்துக்கொண்டிருந்தனர்.

அதனை வரவேற்றவர்களும் இருக்கின்றார்கள். தமிழர் ஏதாவது கூறினால் மட்டும் தான் பிரச்சினையாக இருக்கின்றது. ஆனால் அரசாங்கம் என்ற வகையில், நாங்கள் இந்த இரண்டு கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் வரை பொறுமையாக இருக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)


## விற்பனைக்கு

சீமைக்கிளுவை கதிகால் விற்பனைக்கு உண்டு.
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:-0778695354**
(4793)


# கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கி
வடபிராந்திய அலுவலகத்தில்
கடமையாற்றும்
திருமதி
**மிதிலா மயூரன்**
அவர்களின் அன்புத்
தந்தையார்

**சுப்பையா நாகேந்திரன்**

அவர்களின்
மறைவினால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**தேசிய சேமிப்பு வங்கி**
**யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை**
(4791)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்

**தோற்றம்**
1944
10
27



**மறைவு**
2018
07
04

## தம்பிஜயா கனகம்மா (விற்றா)

புதுமடம் உடுவில் தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா கனகம்மா (விற்றா) நேற்று (04.07.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-அன்னம் ஆகியோரின் அன்பு மகளும், தம்பிஜயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், கனகரத்தினம், தவமணி மற்றும் செல்வராணி, செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், பிரியாவின் பாசமிகு தாயாரும், றஜிதீபனின் பாசமிகு மாமியாரும், சாகித்தியா, ஆதியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2018) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுமடம், உடுவில் தெற்கு,
மானிப்பாய்.
(4798)
**தகவல் குடும்பத்தினர்**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## பத்மநாதன் பாவலன்

**(05.07.2018)**



பொறுமையின் சிகரமே!
பொன் பூத்த புன்சிரிப்பே, பாவலனே!
உன்னை எப்போ நாம் காண்போம்?
இதைத்தானே கேட்டு நின்றோம்,
வேறெதுவும் கேட்டதில்லை!
உன் அக்கா, தம்பியரின் அரிய
பிறவியல்லவோ பாபு நீ?
கூண்டைவிட்டுத் தனி
வழியே சென்ற இடம் கூறாயோ?
நீ இல்லா உலகமிது,
இருண்டதையா எங்களுக்கு.
கூட நின்ற உறவுகளும், உயிர் நண்பர்களும்,
உற்றாரும் எம்முடன் சேர்ந்து உன்
ஆத்ம சாந்தியை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஆனந்த பவனம், 1ம் கட்டை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
(4787)
-குடும்பத்தினர்

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18
-
07
-
1949



இறப்பு
08
-
07
-
2015

அமரர்

## கதிரவேலு சந்திரலிங்கம் அவர்கள்

**(ஓய்வுநிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனை தென்னை வள அ.கூ.சங்கம்)**

ஆண்டு மூன்று ஆனாலும் ஆறமுடியவில்லை
எம்மால் இப்புவியில் உம்மை நாம் இழந்த துயரை
ஈடு செய்ய முடியாமல் தவிக்கின்றோம்.
இன்றுவரை இனியாரும் இல்லை எமக்கு
இப் புவியில் உங்களை இழந்த துயர் நீக்க
ஆண்டு மூன்று ஆனாலும் ஆறவில்லை
எம்மனது என்றென்றும் உங்கள் நினைவோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
-குடும்பத்தினர்
(4792)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனநாயகம் துளியளவுமில்லை

# வடக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

# திரைப்படப் பாணியில் வன்முறைகள்

## அரசு மீது மகிந்த கடும் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு விடயத்திற்கும் தன்னை தொடர்புபடுத்துவதாக குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புலிகள் தொடர்பில் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்திற்கும் தன்னை தொடர்புபடுத்தி விட்டதாக தெரிவித்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. திரைப்பட பாணியில் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றிற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். காரணம் இன்று வடக்கில் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையை ஜனநாயக நாடு என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் ஜனநாயகம் துளியளவும் இல்லை.

மேலும், விஜயகலாவின் கருத்து மிகவும் பாரதூரமானது. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த கருத்துக்கும் எனக்கும் தொடர்புள்ளதென சிலர் பொய் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நாட்டில் எதற்கெடுத்தாலும் எனது பெயரை பயன்படுத்தும் கலாசாரம் ஏற்பட்டுவிட்டது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நவீன முறையில் பனம்வெல்லம் தயாரிப்பு இயந்திரம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)


நவீன முறையில் பனம் வெல்லம் தயாரிப்பதற்கான இயந்திரம் ஒன்று பனை அபிவிருத்தி சபையால் முதன் முறையாக உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 70 மில்லியன் ரூபாய் பெறுமதியான குறித்த இயந்திரத்தை நேற்று முன்தினம் காரைநகரில் அமைந்துள்ள பனைசார் பல்தொகுப்பு நிலையத்தில் வைத்து பனை அபிவிருத்தி சபை தலைவர் ஆர்.சிவசங்கர் உற்பத்தியாளர்களிடம் வழங்கினார்.

இந்த இயந்திரத்தின் ஊடாக 200 லீற்றர் பதநீரை விட்டு ஒரு மணித்தியாலத்தின் பின்னர் சுமார் 20 கிலோ பனம் வெல்லத்தை பெற்று கொள்ள முடியும் என்றும் இதன்மூலம் இலகுவான முறையில் பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு முடியும் என தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)

## நியூயோர்க் ரைம்ஸ் செய்தி குறித்து சி.ஐ.டி விசாரணை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான புலனாய்வு அறிக்கை தொடர்பில், குற்றப் புலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டி) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனரென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அப்பிரிவில் செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமையவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற, பிரதமரிடம் கேளுங்கள், கேள்வி நேரத்தில், கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான, மரிக்கார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## போலி முகப்புத்தகங்கள் தொடர்பில் முறையிடவும்

(கொழும்பு)

போலி முகப்புத்தக கணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் எனவும் அவ்வாறு பதிவு செய்யப்படும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்கள் தொடர்பாக கடந்த 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் 3600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அந்த வகையில் போலி முகப்புத்தகங்கள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுள்ளதாகவும் இதனால் போலி முகப்புத்தக கணக்குகளை முகப்புத்தக அமைப்பு நிறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் 1250 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர அழைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

போலி முகப்புத்தக கணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை 011 269 1692 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நாகர் கோவில் கடற்பரப்பில்

## கடலட்டை பிடித்த 6 பேர் கடற்படையினரால் கைது





(கரணவாய்)

சட்டவிரோதமாக நாகர் கோவில் கடற்பரப்பில் கடலட்டை பிடித்த ஆறு பேரை தாம் கைது செய்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினர் ரோந்து சென்று கொண்டிருந்த போது நாகர்கோவில் கடற்பரப்பில் சட்ட விதிகளை மீறி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த இரண்டு படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 6 பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் மாமுனையைச் சேர்ந்தவர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். (இ-60)

## பனை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அங்குரார்ப்பணமும் அதன் முதலாவது குழுக்கூட்டமும் பனை அபிவிருத்திச் சபை தலைவர் ஆர்.சிவசங்கர், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் ஆகிய இணைத்தலைவர்களின் தலைமையில் நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பனை அபிவிருத்திச்சபையின் தலைமை அலுவலகத்தின் மேல் மண்டபத்தில் (2ஆம் மாடியில்) முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் என பனை அபிவிருத்தி ... விஜேந்திரன் தெரிவித்தார். (இ)

## பிணைமுறி மோசடி விவகாரம்

## சீ அறிக்கையின் தகவல்களை மக்கள் பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக் குழுவால் விசாரிக்கப்பட்ட பிணைமுறி மோசடி சம்பந்தமான அறிக்கையின் சீ 350 ஆம் பிரிவு உள்ளிட்ட தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய சுவடிகள் மற்றும் காப்பகத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல்-வாங்கல்களின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையானது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த காலங்களில் தொடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாகவே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தகவல அறியும் சட்டத்தினை பயன்படுத்தி இது சம்பந்தமான தகவல்களை பெற்றுக்கொள்ள இலங்கை பிரஜைகள் விண்ணப்பிக்கலாம். அல்லது தேசிய சுவடுகள் மற்றும் காப்பகத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை கையளித்து குறுகிய காலத்திற்குள் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெனால்டியில் கொலம்பியாவுக்கு 'உதை'
# 'இடர்' கடந்தது இங்கிலாந்து

உலக கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதிக்கு இங்கிலாந்து அணி ஜோராக முன்னேறியது. 'ரவுண்ட் 16' சுற்றுபோட்டியில்கொலம பியாவை 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் வெளியேற்றியது.

ரஷ்யாவில் உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. நேற்று நடந்த கடைசி 'ரவுண்ட் 16' சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து - கொலம்பியா அணிகள் மோதின. காயத்திலிருந்து (தொடை பின்பகுதி) மீளாத கொலம்பியாவின் நட்சத்திர வீரர் ரொட்ரிக்ஸ் பங்கேற்கவில்லை.

ஆரம்பத்தில் இருந்து கொலம்பியா வீரர்கள் முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டனர். போட்டியின் 6ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில், இங்கிலாந்தின் யங் அடித்த பந்தை கோல்காப்பாளர் ஆஸ்பானியா கச்சிதமாக தடுத்தார்.

41ஆவது நிமிடத்தில், 'பிரீ கிக்' வாய்ப்பில் கோல் அடிக்க முயன்றார் இங்கிலாந்தின் டிரிப்பியர். அதன்போது கொலம்பியாவின் பாரி யாஸ் தனது தலையால் அருகில இருந்த ஹெண்டர்னை மார் பில் முட்டித் தள்ளினார். இதில் அதிர்ஷ்டவசமாக 'மஞ்சள் அட்டையுடன்' தப்பினார் பாரியாஸ். முதல் பாதி கோல் எதுவுமின்றி சமனில் முடிந்தது.

### ஹரி கேன் அசத்தல்

இரண்டாவது பாதியில், 'பெனால்டி பொக்சில்' இங்கிலாந்து அணியின் தலைவர் ஹரி கேனை தலையால் முட்டி தள்ளினார் சான்சஸ். இதில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் ஹரி (57ஆவது நிமிடம்) கோல் அடித்து அசத்தினார்.

கொலம்பியா அணிக்கு 'ஸ்ரொப் பேஜ்' நேரத்தில் (90+3) அதிர்ஷ்டம் அடித்தது. 'கோர்னர்' வாய்ப்பில் குயோடிராடோ அடித்த பந்தை பெற்ற, கொலம்பியாவின் மினா அப்படியே தலையால் முட்டி கோல் அடிக்க ஆட்டம் 1-1 என சமனானது.

அடுத்து நடந்த கூடுதல் நேரத்திலும் (30 நிமிடம்) ஸ்கோர் சமமாக (1-1) இருந்ததால், வெற்றியாளரை முடிவு செய்ய போட்டி 'பெனால்டி ஷூட் அவுட்டுக்கு' சென்றது. இதில் இரு அணிக்கும் தலா 5 வாய்ப்பு கொடுக்கப்படும். அதிக கோல் அடிக்கும் அணி வெற்றி பெறும்.


வெற்றி பெனால்டியை அடித்த எரிக் டயர்

### கைகொடுத்த பிக்போர்ட்

**● முதல் வாய்ப்பு**

அணித் தலைவர் பல்காவோ (கொலம்பியா), அணித் தலைவர் ஹரி கேன் (இங்கிலாந்து) கோல் அடித்தனர் (1-1).

**● 2ஆவது வாய்ப்பு**

குயோடிராடோ (கொலம்பியா), ராஸ் போர்ட் (இங்கிலாந்து) கோலாக்கினர் (2-2).

**● 3ஆவது வாய்ப்பு**

முரில் (கொஷம்பியா) கோலாக்கினார். ஹெண்டர்சன் (இங்கிலாந்து) அடித்த பந்தை கொலம்பியா கோல்காப்பாளர் ஆஸ்பானியா தடுத்தார் (3-2).

**● 4ஆவது வாய்ப்பு**

உரிபி (கொலம்பியா) கோல்போஸ்ட் மீது பந்தை அடித்து வீணாக்கினார். டிரிப்பர் (இங்கிலாந்து) கோலாக்கினார் (3-3).

**● 5ஆவது வாய்ப்பு**

கார்லோஸ் பாக்கா (கொலம்பியா) உதைத்த பந்தை, இங்கிலாந்து கோல்காப்பாளர் பிக்போர்ட் ஒற்றை கையால் தடுத்தார். இம்முறை, இங்கிலாந்தின் எரிக் டயர் கோல்போஸ்டின் இடது புறம் பந்தை உதைத்து கோலாக்கினார். இங்கிலாந்து அணி 4-3 என்ற கோல் கணக்கில் 'திரில்' வெற்றி பெற்றது.

நாளை மறுதினம் 7ஆம் திகதி நடக்கவுள்ள காலிறுதியில் இங்கிலாந்து அணி சுவீடனை எதிர் கொள்கிறது.

### முதல் முறை

மிகப்பெரிய தொடரில் இங்கிலாந்து அணி இரண்டாவது முறையாக 'பெனால்டி ஷூட்' அவுட்டில் வெற்றி பெற்றது. இதற்கு முன் 1996, யூரோ தொடரில் ஸ்பெயினை வென்றது. தவிர உலக கிண்ணத் தொடரில் முதன் முறையாக இம்முறையில் வெற்றி பெற்றது. 1990 (மேற்கு ஜேர்மனி), 1998 (ஆர்ஜென்ரீனா), 2006ல் (போர்த்துக்கல்) தோற்றது.



### மூன்றாவது முறை

ரஷ்யாவில் நடக்கும் உலக கிண்ணத் தொடரின் 'நொக்-அவுட்' சுற்றில், மூன்றாவது முறையாக 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் வெற்றி முடிவானது.

ஸ்பெயின் -ரஷ்யா, குரோஷியா - டென்மார்க் அணிகள் மோதிய போட்டிகளின் வெற்றி இப்படித்தான் அமைந்தது.



### 2006க்குப்பின்...

கடந்த 2006க்குப் பின் இங்கிலாந்து அணி உலக கிண்ணத் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியது. 2010 (ரவுண்ட் 16), 2014ல் (லீக் சுற்று) லீக் சுற்றுடன் திரும்பி இருந்தது.

### இரண்டாவது இடம்

ரஷ்ய மண்ணில் இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன் இது வரை 6 கோல் அடித்துள்ளார்.

இதன் மூலம், உலக கிண்ணக் கால் பந்து தொடரில் அதிக கோல் அடித்த இங்கிலாந்து வீரர்கள் பட்டியலில் ஜெப் ஹர்ஸ்டை (5) முந்தி 2 ஆவது இடம் பிடித்தார். முதலிடத்தில் கேரி லின்கர் (10) வகிக்கிறார்.

### மினா சாதனை

ரஷ்ய மண் ணில் கொலம்பியா வீரர் மினா 3 கோல் அடித்துள்ளார்.

இதன்மூலம், ஒரே உலக கிண்ணத் தொடரில் அதிக கோல் அடித்த தற்காப்பு வீரர் என்ற சாதனையை ஜேர்மனியின் போல் பிரய்ட்னருடன் (1974, 3) பகிர்ந்து கொண்டார்.

---

# சபாஷ் குல்தீப்: இந்தியா அபார வெற்றி



இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் 'ரி20' போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ராகுல் சதம் அடிக்க, பந்துவீச்சில் குல்தீப் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின்தலைவர் ஹோலி, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### சபாஷ் குல்தீப்

இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் (30), பட்லர் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. பட்லர், சர்வதேச 'ரி20 போட்டிகளில் 7ஆவது அரைச் சதம் அடித்தார். ஹேல்ஸ் (8) ஏமாற்றினார். குல்தீப்பின் 3ஆவது ஓவரின் முதல் பந்தில் ஒய்ன் மோர்கன் (7) சிக்கினார். 3, 4ஆவது பந்துகளில் பேர்ஸ்டோவ், ஜோரூட், 'டக்' அவுட்டாகினர். 5 ஆவது பந்தை மொயீன் அலி (6) தடுத்தாட 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது.

மீண்டும் வந்த குல்தீப் யாதவ், பட்லரை (69) வீழ்த்தினார். உமேஷிடம், ஜோர்டன் (0) சரிந்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 5, உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### ராகுல் அபாரம்

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் (5) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. பின் வந்த ராகுல் சிக்சர் மழை பொழிந்தார். பிளங்கட் வீசிய 11 ஆவது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 20 ஓட்டங்கள் எடுக்க, வெற்றி இலக்கை வேகமாக நெருங்கியது இந்தியா.

இவ் இணை 2ஆவது விக்கெட்டுக்காக 123 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ரோகித் சர்மா (32) ஆட்டமிழந்தார். பின் சற்று நிதானம காட்டிய ராகுல், 53ஆவது பந்தில் சதம்எட்டினார்.

இதன்மூலம் சர்வதேச ரி20 அரங் கில் ரோகித்துக்குப்பின் 2 சதம் அடித்த வீரரானார் ராகுல்.

கடைசியில் ஹோலி ஒரு சிக்சர் அடிக்க, 18.2 ஓவரில் இந்திய அணி 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 163 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ராகுல் (101), ஹோலி (20) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

1

நேற்று பட்லரை ஆட்டமிழக்கச் செய்த இந்தியாவின் குல்தீப், சர்வதேச 'ரி20' அரங்கில் ஒரு போட்டியில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய [illegible] வீச்சாளரானார்.

---

# மரண அறிவித்தல்



## பிரான்சிஸ் பவுலப்பு இயஸ்ரின் றொசைசஸ்

(மண்டைதீவு - 5)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06.01.1972 | 04.07.2018 |

*மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் பவுலப்பு (பொன்ராசா) இயஸ்ரின் றொசைசஸ் (சைமன்) அவர்கள் நேற்று (04.07.2018) புதன் கிழமை பிரான்ஸில் காலமானார்.*

*அன்னார் பிரான்சிஸ் பவுலப்பு - றீற்றாம்மா தம்பதியரின் அன்பு மகனும் கெல்மன் (உரிமையாளர் - கெல்மன் பொறியியல் நிறுவனம்), காலஞ்சென்ற பிறிமன், றேமன், அமுதா (பிரான்ஸ்), சுகிர்தா, றஜிதா, விஜிதா (லண்டன்), வினோதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிறிஸ்ரபெல் (அதிபர் - சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்), மொறின் ஜெயந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்.மாநகர சபை), எட்வின் யூலியஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற யோசப் இம்மானுவல், சகாயசீலன் (கட்டார்), பீலிக்ஸ் தாசீசியஸ் (லண்டன்), டண்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தனோஜிகா, ஜெனிஸ்ரன், ஜெமில்ரன், ஜெனுசன் ஆகியோரின் சித்தப்பாவும் கிளின்ஸ்மன், வெனிஸ்ரன், சொபியா, பிறின்ஸ்ரன், டல்சிகா, றிசிக்கா, டிலன், வெகாசன், கிருத்திகா ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.*

*அன்னாரின் நல்லடக்க நிகழ்வு பின்னர் அறிவிக்கப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(4799)

5 வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:-
தந்தை, சகோதரர், சகோதரிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வளமான எதிர்காலத்துக்கு விஞ்ஞானத்தின் ஊடான தேடல்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச விஞ்ஞான ஆய்வு மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மண்டபத்தில் இடம்பெற்றது. விஞ்ஞான பீட விரிவுரையாளர் திருமதி எஸ்.குகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம கலந்து கொண்டார். இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஜே.பி. ஜெயதேவன், விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பணிப்பாளர் தர்மதிலக்க ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர். சர்வதேச விஞ்ஞான ஆய்வு மாநாட்டை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தால் உருவாக்கப்பட்ட நூலை துணைவேந்தர் வெளியிட்டுவைக்க, அமைச்சர் சரத் அமுனுகம பெற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து நான்கு பிரிவுகளாக ஆய்வு மாநாட்டின் அமர்வுகள் இடம்பெற்றன. (படங்கள்: பொ.சோபிகா)

## 5 மாதங்களில் 241 பேர் உயிரிழப்பு

# மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த புகையிரத நிலையங்களில் மஞ்சள் கோடு




(கொழும்பு)

கடந்த ஐந்து மாத காலத்தினுள் புகையிரதம் மோதிய விபத்துக்கள் காரணமாக 241 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், புகையிரத விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் விரிவான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் தெரிவித்துள்ளது.

பிரதான புகையிரதங்கள் மற்றும் புகையிரத மேடைகளை (Platform) பயன்படுத்தி பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வேலைத் திட்டம் மேற்கொள்ள எதிர் பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புகையிரத மேடைகளில் (Platform) மஞ்சள் நிற கோடு பதியப் படவுள்ளதாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பள்ளத்தில் விழுந்த சிறுமியை காப்பாற்றிய கடற்படையினர்

(கொழும்பு)

காலி - ஹமஸ்வல பிரதேசத்திலுள்ள பொனிடா சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் சிறுமியொருவர் பள்ளத்தில் விழுந்த நிலையில் அவரை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிறுமி பள்ளத்தில் விழுந்ததையடுத்து இது தொடர்பில் காலி துறைமுக பொலிஸார், தென் மாகாண கடற்படை முகாம் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கடற்படையினர் அங்கு சென்று சிறுமியை பாதுகாப்பாக மீட்டுள்ளனர். (இ-7)


# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 06.06.2018 புதன்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவி

## அமரர். திருமேனிப்பிள்ளை மாணிக்கரத்தினம்

மண்ணில் 19.09.1943
விண்ணில் 06.06.2018



அன்புக்கோர் இலக்கணம் வகுத்து
அனைவரையும் ஈர்த்த தாயவளே!
என்புருக்கி எங்கள் அனைவரையும் காத்து
ஏற்றம் பெறவும் வைத்த பெற்றவளே!
வன்மம் நெஞ்சினுள் இருந்ததும் இல்லை
வாய் தவறியும் இழிசொல் நீ பேசியதும் இல்லை!
துன்பம் என்னவென அறியாதும் வளர்ந்து–இன்று
துயரக் கடலினுள் மூழ்கவும் வைத்தே நீ
மறைந்ததும் ஏனோ தாயே!

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 06.07.2018 நாளை வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி வீதி,
வல்வெட்டித்துறை.
TP:- 077 917 3549

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

**மேடம்:** தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும் நாள்.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | சூரி |
| | இராசி பலன் | | சுக். ராகு. புத |
| செவ். கேது | கிரகநிலை | சந்திராஷ்டமம் மகம் | |
| சனி | | குரு | |

**05.07.2018**
ஆனி 21, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சப்தமி முன்னிரவு 8.59 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு 3.28 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை

வளவன்

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** தூரதேசத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**துலாம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழிலில் ஆர்வதுடன் செயற்படுவீர்கள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தாருடன் குதூகலம் தரும் பயணங்கள் செல்ல நேரிடலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம் உறையும் உபதேச திருக்கோவில் கல்வித்தெய்வம் ஸ்ரீ சரஸ்வதி அம்பாளின் மஹா கும்பாபிஷேகமும் ஞானரத்தின குருகுல அறநெறி வித்தியாலய அங்குரார்ப்பண நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்:-பொ.சோபிகா)



ஊரெழு கிழக்கு அமரர் சின்னட்டியன் -பசுபதி ஞாபகார்த்த நிதியத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் மங்கள விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவத்துறை வணிகபீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வளர்பிறை சனசமூக நிலையத்துக்கு நினைவுப்பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# மாவட்ட தொழிற் சந்தை நிகழ்விற்காக தொழில் வழங்குநரைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் நாடும் இளைஞர்களையும் தொழில் வழங்குநரையும் ஒன்றிணைத்து இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு எதிர்வரும் 21.07. 2018 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் நடத்தப்படவுள்ளது.

எனவே, தொழில் நாடும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கக்கூடிய நிறுவனங்கள் மாவட்ட செயலக வேலைவாய்ப்பு பிரிவுடன் நேரடியாகவோ அல்லது 0212219359 என்னும் இலக்க தொலைபேசி ஊடாகவோ பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் கல்லூரியின் அதிபர் எம்.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர் எஸ்.மகாதேவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் எஸ்.தேவமனோகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுரையினை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கௌரிகாந்தன் நிகழ்த்துவார். (இ-8)




# மஹா கும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

வேலணை சரவணை மேற்கு 2ஆம் வட்டாரம் ஸ்ரீ வரத காளி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மஹா அபிஷேகப் பூஜை, வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். (இ

# செபஸ்தியார் ஆலயத்திருவிழா

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருநாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து திருப்பலிப் பூசைகள் இடம்பெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை பெருந்திருவிழா(வேஸ்ப்பர்) பூசை இடம்பெற்று, மறுநாள் காலை (08-07-2018) ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலி பூசை இடம்பெறும்.

இவ் ஆலயம் யாத்திரிகர் தலமாகையினால் யாத்திரிகர்களாக வந்துள்ள அடியவர்களின் நலன்கருதி வடமராட்சி கிழக்கு பலநேக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் விசேட வியாபார நடவடிக்கை இடம்பெறுகின்றது.

ஆலயத்திற்கு அடியார்கள் வந்துபோவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையினரும் வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்துக் கழகத்தினரும் விசேட பேருந்து சேவையினை நடத்தவுள்ளனர். குடிநீர், சுகாதாரம் மற்றும் அனைத்துச் சேவைகளையும் மருதங்கேணி பிரதேச செயலகமும் பருத்தித்துறை பிரதேச சபையினரும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர். (இ-64)

# விடுதிக்குள் நுழைந்தவர் மீது பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் பருத்தித்துறை வைத்தியசாலையின் பின் மதில் வழியாக ஏறிக் குதித்து பெண்கள் விடுதிக்குள் நபர் ஒருவர் புகுந்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலையின் காவலாளி அங்கு சென்று அவரை விரட்டியுள்ளார்.

இச்சம்பவத்தில் வைத்தியசாலையில் பொருத்தப்பட்டிருந்த மின் சாதனப் பொருள் ஒன்று சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வைத்தியசாலையில் புகுந்த நபர் தும்பளைப் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தால் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-60)

# புள்ளிகள் கரைந்த பொழுது நாவல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆதி லட்சுமி சிவகுமாரின் "புள்ளிகள் கரைந்த பொழுது" நாவல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் 7ஆம் திகதி யாழ்.நாவலர் மண்டபத்தில் பிற்பகல் 3.15 மணியளவில் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறும். நாவல் வெளியீட்டுரையை த.செல்வமனோகரனும் பதிப்பீட்டுரையை கை.சரவணன், ந.குகபரன் ஆகியோர் வழங்குவர். (இ

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் முற்பகல் 3 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே.உதய மோகனின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.காண் டீபன், சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி செ.சிவ குமார், புகையிரத நிலைய ஓய்வு நிலை அதிபர் த.திருஞான சம்பந்தர், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சி.லகிந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

6 ஆம் வட்டாரம், மண்டைதீவு, பிள்ளையார் கோவில் மடத்தில் தூக்கிட்டு இறந்தவரான ய.ஜசரட்ண, முகவரி:- 411/70, பம்பலப்பிட்டி, கொழும்பு-04 65 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் உறவினர் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவக பிரதேச மரண விசாரணை அதிகாரியால் 02.07.2018 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த சடலத்திற்கு உரித்துடையவர்கள் அடையாளம் காட்டி 07 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ

# கல்விக் கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.சத்தியவரதனின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராசா, கௌரவ விருந்தினராக யாழ்.வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தர்மிகா மோகன்ராஜ் ஆகியோர் கலந்துகொள்வர். (இ

# முத்தமிழ் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் குமார சாமி மண்டபத்தில் தமிழ் மன்றத்தலைவர் செல்வி சு.தபோதினி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகை சார் வாழ் நாள் தமிழ் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், ஜப்பான் டோக்கியோ கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுநிலை பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








2017 க:பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு மடிக் கணனி மற்றும் 5000 ரூபா புலமைப்பரிசுகள் வழங்கும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படை தலைமையகத்தில் இடம்பெற்றது. பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் 306/பி2 மாபொல லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், இராணுவத்தினர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# விஜயகலாவின் கருத்து இனவாதிகளுக்கு தேன்

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்ற இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் பேச்சு தெற்கில் உள்ள இனவாதிகளுக்கும், இனவாதத் தீயில் குளிர்காய்வதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் தரப்பினருக்கு தேனாக இனிக்கும் செய்தியாக மாறியிருக்கிறதென பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் சர்ச்சைக்குரிய பேச்சு தொடர்பாக முஜிபுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்சி பெற்ற எமது நாட்டை, மீண்டும் யுத்த சூழல் ஒன்றுக்குள் தள்ளிவிட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து அம்பலப்படுத்துகிறது.

சிறுவர்களும், பெண்களும் பாதுகாக்கப்படவேண்டுமென்றால் வடக்கிலே விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக வேண்டும் என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் விஜயகலா கூறியிருக்கும் கருத்து தெற்கிலே பாரிய கருத்து மோதல்களையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்ற அமைச்சர் விஜயகலாவின் பேச்சு தெற்கில் உள்ள இனவாதிகளுக்கும், இனவாதத் தீயில் குளிர்காய்வதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் தரப்பினருக்கு தேனாக இனிக்கும் செய்தியாக மாறியிருக்கிறது.

தெற்கில் இனவாதத்தையே தனது ஊன்றுகோலாக வைத்து எழுச்சிபெற முயற்சி செய்துகொண்டிருக்கும் எதிர்த் தரப்பினருக்கு அமைச்சர் விஜயகலாவின் பேச்சு ஒரு வரப்பிரசாதமாக மாறியிருக்கிறது.

வடமாகாண முதலமைச்சர் உட்பட சில தமிழ் அரசியல்வாதிகளின் இனவாதக் கருத்துக்கள் தெற்கிலே சிங்கள இனவாதிகளுக்கு பிராணவாயு ஏற்றிக்கொண்டிருக்கும் நிலையில், தென்பகுதி இனவாதிகளின் ஆவேசப் பேச்சுக்கள் நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு அச்சத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றன.

இனங்களுக்கிடையிலான இந்த கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி இனவாதத்தின் மூலமாக எதிர்த் தரப்பினர் தாம் இழந்த மக்கள் ஆதரவைப் பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, எமது இந்த தாய் நாட்டை இனவாதத் தீயில் எரித்து சாம்பலாக்க தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தீய சக்திகளுக்கு ஓர் உத்வேகத்தையும், உந்து சக்தியையும் மாத்திரமே அமைச்சர் விஜயகலாவின் பேச்சால் வழங்க முடியும்.

ஜனநாயக விழுமியங்களை மதிக்கின்ற பண்பட்ட ஒரு சமுதாயம் மீண்டும் அழிவுப் பாதைக்கு இந்நாடு செல்வதை ஒரு போதும் அங்கீகரிக்க மாட்டாது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)





அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் -05.07.2018

கர்மாரம்பம் 01.07.2018 ஞாயிறு காலை 9.15-11.18

கும்பாபிஷேகம் 05.07.2018 வியாழன் காலை 9.03-11.05

(4726) அனுசரணை=ஸ்ரீகௌதமன் ஹாட்வெயர், புத்தூர்


# யாழ். நகரை அழகுபடுத்த அனைவரும் ஒத்துழையுங்கள்

## முதல்வர் ஆனோல்ட் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை சிறப்புற அழகுபடுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்த யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனோல்ட், சட்ட விரோத செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.நவீன சந்தை கட்டடத்தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த 5 விளம்பர பலகைகள் மாநகரசபையால் அகற்றப்பட்டன. குறித்த விடயம் தொடர்பாக யாழ்.வணிகர் கழகத்துக்கு எந்தவிதமான அறிவித்தலும் வழங்கப்படவில்லை என்றும் தான் தோன்றித்தனமாக விளம்பர பதாகைகளை அடித்து நொருக்கியுள்ளார்கள் எனவும் முன்னறிவித்தல் வழங்கப்படாது மேற்கொள்ளப்பட்ட இந்த செயற்பாட்டை கண்டிப்பதாக யாழ்.வணிகர் கழக தலைவர் இ.ஜனக்குமார் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த விடயம் குறித்து யாழ்.மாநகர முதல்வரை தொடர்பு கொண்டு கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

நவீன சந்தை கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் அகற்றுவதற்கான தீர்மானம் தன்னிச்சையாக எடுக்கப்படவில்லை. அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த கட்டடம் கலாசார முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் அமைப்பை மறைக்கும் வகையிலான விளம்பர பலகைகள் பல அமைக்கப்பட்டுள்ளன.

அதை அகற்றி ஒழுங்கு முறைப்படி சரியான அளவுப் பரிமாணத்துடன் பதாகைகள் அமைக்கும் படி கடந்த வருடங்களில் வர்த்தகர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் குறித்த வர்த்தகர்களுக்கு பதாகைகளை அகற்றுமாறு பலதடவை அறிவித்தல் வழங்கப்பட்டது. அவர்கள் அகற்றவில்லை. அதன் பின்னர் தாம் மாநகர சபையால் அகற்றுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.நகர்பகுதியை சிறப்பாக அமைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் இனி வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கு தடையாக யாரும் இருக்க கூடாது. வர்த்தகர்கள் வியாபாரிகளை பாதிக்காத வண்ணம் இந்த செயற்பாடுகளை செய்து வருகிறோம். இனி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் அவர்களுடன்கலந்துரையாடி இணைந்து முடிவெடுத்த பின்னரே மேற்கொள்ளவுள்ளோம்.

சரியான முறையில் பதாதைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்குவோம். ஆனால் இந்த விளம்பர பலகைகள் அகற்றும் செயற்பாடு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதை அடித்து உடைத்து அடாவடித்தனமாக யாரும் செய்யவில்லை. இந்த விடயம் குறித்த உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் வர்த்தக சங்கத்துக்கு அறிவிக்கவில்லை. இனிவரும் காலங்களில் அவர்களுக்கும் தெரியப்படுத்தி இந்த செயற்பாடுகளை மேற்கொள்வோம் என மேலும் தெரிவித்தார். (இ-9)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L சொந்தத் தொழில்
தொ.இ: B/7815

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 23 செவ் 7 இல்
தகைமை/தொழில்: O/L தனியார் தொழில்
தொ.இ: B/7816

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்2ஆம் பாதம்
கி.பா: 58
உயரம்: 157cm
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: B/7817

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2 ஆம் பாதம்
கி.பா: 65 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/7821

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1ஆம் பாதம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/8246

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவர்
தொ.இ: G/8247

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 4 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: HNDIT தனியார் தொழில்
தொ.இ: G/8250

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 167cm
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: G/8252

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவ பிரிவின் முயற்சியினால்

## 26 குளவிக்கூடுகளும் முழுமையாக அழிப்பு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிர தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு தூய ஜோசப் வாஸ் ம.வித்தியில் கடந்த சில மாதங்களாக குளவிகளின் தாக்கம் அதிகரித்த நிலையில் மன்னார் மாவட்ட அனார்த்த முகாமைத்துவ பிரிவின் கடும் முயற்சியினால் குறித்த 26 குளவிக் கூடுகளும் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

விடத்தல்தீவு தூய ஜோசப் வாஸ் ம.வித்தியில் கடந்த சில மாதங்களாக குளவிகளின் தாக்கம் மற்றும் பெருக்கம் அதிகரித்த நிலையில் பாடசாலை கட்டடங்களில் சுமார் 26 குளவிக்கூடுகள் காணப்பட்டன.

கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் குறித்த 26 குளவிக் கூடுகளையும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு ஆதரவாக பொலிஸார் மற்றும் பாடசாலை மாணவர்களின் பெற்றோரும் பாடசாலை சமூகத்தினரும் செயற்பட்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை அழிக்கும் நடவடிக்கைகள் ஒரு மணியளவில் நிறைவடைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தீயணைப்புப் பிரிவு இல்லாத காரணத்தினாலேயே குறிப்பிட்ட காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் மற்றும் அவசர நிலைமைகளின் போது உரிய மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக தெரிய வருகின்றது. (2)

# உயிரிழந்த இரு யானைகளின் எச்சங்கள் வவுனியாவில் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா கள்ளிகுளம் கிராமத்தில் உயிரிழந்த இரு யானைகளின் எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டன.

கள்ளிக்குளம், குடியிருப்புக்கு பின்புறமான பற்றைகள் நிறைந்த பகுதியில் இருந்தே இரண்டு யானைகள் உயிரிழந்து அழுகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் யானைகளின் நடமாட்டம் அடிக்கடி காணப்பட்டது. இந் நிலையில் அப்பகுதிக்குச் சென்ற ஒருவர் வெட்டப்பட்ட குழி ஒன்றில் இருந்து துர்நாற்றம் வருவதை அவதானித்து விட்டு சென்று பார்த்தபோது அக்குழிக்குள் இரு யானைகள் உயிரிழந்து அதன் பாகங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டுள்ளன. பின்னர் பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தியதையடுத்து மாமடு மற்றும் வவுனியா பொலிஸாரும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இரு யானைகளும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன் குழியில் விழுந்தமையால் யானைகள் உயிரிழந்ததா? அல்லது தந்தங்கள் பெறும் நோக்கோடு கொல்லப்பட்டதா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

## தென்னை பயிர்ச்செய்கை சபையின்

# செவ்வண்டு தாக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முல்லையில்

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும்கோடை காரணமாக தென்னையில் செவ்வண்டின் தாக்கம் பாரியளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தின் தொட்டியடி, நெத்தலியாறு ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கும் வள்ளிபுனம் பிரதேசத்தின் தேவிபுரம், ஆனந்தபுரம், சுதந்திரபுரம் போன்ற கிராமங்களில் முற்பகல் 11 மணிக்கும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பண்ணை திட்டமிடல் அதிகாரி ஈ.சற்குணன் மற்றும் தென்னை அபிவிருத்தி உத் தியோகத்தர்கள், ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் மக்களுக்கு செவ்வண்டு தாக்கம் தொடர்பிலும் தடுப்பு முறைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர், செவ்வண்டானது தென்னையின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தென்னைமரம் விழுந்தவுடனேயே மக்களுக்கு விழிப்பு வருகின்றது. அதனை தவிர்ப்பதற்காக செவ்வண்டு தடுப்பு முறைகளை ஆரம்பத்திலேயே செய்து தாக்கத்தை குறைக்கலாம். இதற்கு முன் ஏற்பாடாக தென்னம்தோட்ட வளவையும் தென்னையையும் சுத்தமாக வைத்திருப்பதோடு செவ்வண்டு தாக்கம் தெரிந்தவுடன் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு அறிவித்து பொருத்தமான தடுப்பு முறைகளின் மூலம் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ் வில் பெரிய, சிறிய தென்னம் தோட்ட உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வின் தொடர்ச்சியாக மக்களுக்கு மூன்று வார காலம் அவகாசம் வழங்கப்பட்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் உத்தியோகத்தர்கள் சென்று பரிசீலனை செய்த பின் எதிர் வரும் 17 ஆம் திகதி ஆம் திகதி 2ஆம் கட்ட விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெறுமென்பதனையும் தெரிவித்தார். (2)




# கடலட்டை பிடித்த எட்டுப் பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள கடலட்டை பிடித்த எட்டுப் பேருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி,தாளையடி ஆகிய பகுதிகளில் அரச நிலத்தில் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து கடலட்டை பிடிக்கும் எட்டுப் பேருக்கு எதிராகவே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச நிலத்தில் அத்துமீறி குடியேறிய ஆட்சி உரிமையை மீளப் பெறல் சட்டத்தின் கீழ் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து கடலட்டை பிடிப்போருக்கு எதிராகவும் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (2-60)

## புதிய தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைவான

# மாகாணசபை தேர்தல் முறை தொடர்பில் வவுனியாவில் கருத்தமர்வு



(குருமன்காடு)

புதிய தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைவான மாகாணசபைத் தேர்தல் முறை தொடர்பான கருத்தமர்வு ஒன்று நேற்று வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோருக்கு இக் கருத்தமர்வு நடைபெற்றது.

இதன்போது புதிய தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக தொகுதி ரீதியாக மாகாணசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறை, விகிதாசார அடிப்படையில் உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறை, எல்லை நிர்ணயம் மற்றும் சிறுபான்மை சமூகத்தின் மத்தியில் ஏற்படும் நன்மை, தீமை தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்பட்டன. அத்துடன் கலந்து கொண்டோரின் கருத்துக்களும் பெறப்பட்டன.

இதில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, து.ரவிகரன், த.குருகுலராஜா, ப.அரியரட்ணம், க.புவனேஸ்வரன், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் உதுமாலெவ்வை மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## உரிய காலத்தில்

# பயிர்ச்செய்கையை மேற்கொள்ள மானியஉரம்,உள்ளீடுகளை வழங்குங்கள்

## கமக்கார அமைப்பு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தின் கௌதாரி முனைப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மானிய உரம் மற்றும் ஏனைய உள்ளீடுகளை மிக விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கமக்கார அமைப்பு கோரியுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கௌதாரி முனைக் கிராமத்தில் வாழ்ந்து வரும் சுமார் 42 வரையான விவசாயக் குடும்பங்களும் கடற்றொழிலை நம்பி வாழ்ந்து வரும் 83 வரையான் குடும்பங்களும் பல்வேறு துன்பங்களை எதிர் கொண்டு வருகின்றன.

இக்குடும்பங்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழந்து வருவதாகவும் குறித்த பிரதேசத்தில் சுமார் 250 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் வருடாந்தம் மானாவாரிப் பயிர்ச்செய்கையாக காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ள கமக்கார அமைப்புக்கள் மழையை நம்பியே முழுமையான பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதனால் உரிய காலத்தில் தமது பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது என்றும் தமக்கான உரமானியம் மற்றும் ஏனைய உள்ளீடுகளை மிக விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# கட்டடத் தொகுதி திறந்து வைப்பு



(கண்டாவளை)

இந்திய அரசாங்கமானது வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு என பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் 27 பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்காக 250 மில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி நாச்சிக்குடா முஸ்லிம் கலவன் பாடசாலை வகுப்பறைக்கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் மாணவரின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. இந்திய-இலங்கை நல்லுறவை வளர்க்கும் நோக்குடன் இந்திய மக்களின் நிதிப் பங்களிப்புடன் குறித்த புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. 8.5 மில்லியன் நிதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த கட்டடத்தொகுதி. கணனி அறை ஆகியவ ற்றை யாழ்.இந்திய துணை தூதுவர் ச.பாலச்சந்திரன் திறந்து வைத்தார். வகுப்பறைக் கட்டடத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்டோர் திறந்து வைத்தனர். (2-315-312)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 250 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில்

# மன்னாரில் பேருந்து தரிப்பிடம் விரைவில் அடிக்கல் நாட்டல் நிகழ்வு

## மன்னார் நகர முதல்வர் தெரிவிப்பு



(மன்னார்)

**மன்னார் நகரில் அரச மற்றும் தனியார் பேருந்து தரிப்பிடங்களை ஒன்றிணைத்து புதிதாக அமைக்கப்பட வுள்ள பேருந்து தரிப்பிடத்திற்கான ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருவதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.**

குறித்த வேலைத்திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர சபையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் நகர முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக பராமரிப்பு செய்யப்படாமல் காணப்பட்ட மன்னார் பேருந்து தரிப்பிடம் மன்னார் நகர சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக நகர அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக இலங்கை நகர அபிவிருத்தி திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் சுமார் 250 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் புதிய பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் மன்னார் மிகவும் அழகிய பேருந்து தரிப்பிடத்தை கொண்டதாக காட்சியளிக்கும்.

குறித்த பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்கான நிதியானது நகர அபிவிருத்தி திட்டத்தினூடாகவே பெற்றுக் கொள்ளப்பட்டதே தவிர வேறு எந்த அமைச்சினூடாகவும், அல்லது அமைச்சர்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

குறித்த நிதியானது மன்னார் நகர சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக நகர அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி.

மேலும் எதிர்காலங்களில் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

அதற்கான ஆவணங்கள் குறிப்பிட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மன்னாரின் புதிய பேருந்து தரிப்பிடம் அமைப்பதற்கான ஒப்பந்த தாரர்களையும் எமக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இன்னும் சில தினங்களில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. நகர திட்டமிடல் பணிப்பாளரினால் குறித்த பேருந்து தரிப்பிடத்திற்கான வரைபடமும் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத் திட்டமானது நகரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடாகவே கருத வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)




# வவுனியாவில் 18பேருக்கு டெங்குநோய் தொற்று

**பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து**

(குருமன்காடு)

வவுனியாவில் சில பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் 18 பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளமை பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் வவுனியா மேற்பார்வை பொது சுகாதாரப்பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

தற்போது வவுனியாவில் டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பாக கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கும் போது,

கடந்த வாரத்தில் கற்குழி, தேக்கவத்தை, வெளிவட்ட வீதி ஆகிய பகுதிகளில் பெருமளவான டெங்கு நுளம்புகள் பெருக்கெடுப்பது பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து, அதனை தடுக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பரிசோதகர்கள் எட்டுப் பேரடங்கிய குழுவினர், பொது அமைப்புக்கள், கிராம மக்களுடன் இணைந்து வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அத்துடன் தற்போது குறித்த பகுதிகளிலிருந்து குட்செட் வீதிக்கு டெங்கு நுளம்புகள் பரவி வருவதாகவும் அப்பகுதியிலுள்ள டெங்கு நுளம்பை அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளிலுள்ள மாடி வீடுகள், தண்ணீர்த்தொட்டிகள் ஆகியவற்றில் கடும் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. இங்கிருந்து வெளிப்பகுதிகளுக்கு டெங்கு நுளம்பு பெருகும் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தற்போது மாலை வேளைகளில் பெய்து வரும் மழையினால் மேலும் டெங்குநுளம்பு பெருக்கெடுக்கும் அபாயம் காணப்படுகின்றது. ஆதலால் பொதுமக்கள் தமது இருப்பிடங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் சுகாதாரப் பரிசோதகர்களின் நடவடிக்கையில் இணைந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-250)

# சமூகப் பொறுப்புடன் இணைந்து செயற்படும்போது குற்றச் செயல்களை குறைத்துக்கொள்ள முடியும்

## வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடக்கில் அதிகரித்து வருகின்ற குற்றச்செயல்களை கவனத்தில் கொண்டு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நேற்று முன்தினம் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கவனத்தில் கொண்டு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனால் தனது பிரிவில் குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் அவசர கலந்துரையாடல் ஒன்றினை தனது பிரதேச செயலக பிரிவிலுள்ள அனைத்து கிராம அலுவலர்களுடனும் பாடசாலை அதிபர்களுடனும் ஆட்டோச் சங்கங்களின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுடனும் சிகையலங்கார சங்கங்களின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுடனும் மேற்கொண்டிருந்தார்.

இக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். இணைந்து செயற்படுகின்ற போதே குற்றச் செயல்களைக் குறைத்துக் கொள்ள முடியும். இதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதையற்ற இனிய வாழ்வுத்திட்டத்தை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் வலுவாக அமுல்படுத்தி போதையற்ற வாழ்வு வாழ்வதற்கு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். கிராம அலுவலர்கள் அனைவரும் தமது பிரிவிலுள்ள அனைத்து சட்ட ரீதியற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீதும் தங்களுக்கு வழங்கப்பட்ட சமாதான நீதவான் என்ற பதவியின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராம அலுவலர்களினால் "குற்றவாளிகள் தொடர்பான வரிசை அறிக்கையினை கிரமமாகப் பேணுவதுடன், குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை நீதிமன்றத்திற்கும் எனக்கும் அறிக்கையிடுங்கள்" எனத் தெரிவித்தார். (2-250)

## சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ்

# வர்த்தக நிலைய முன்கதவை உடைத்து விபத்துக்குள்ளானது



(மல்லாவி)

பரந்தன் பேருந்து நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலையம் மீது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த ஹயஸ் ரக வாகனம் மோதுண்டு விபத்துச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பரந்தன் நகரப் பகுதியில் உள்ள பேருந்து நிலையப் பகுதியில் ஹயஸ் ரக வாகனத்தை நிறுத்தி விட்டு உரிமையாளர் சென்றிருந்த நிலையில், வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு வந்த ஹயஸ் வாகன உரிமையாளரின் உறவினர் ஒருவர் ஹயஸ் வாகனத்தை இயக்கிய வேளை சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வர்த்தக நிலையத்தின் முன் கதவை உடைத்துப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன் ஹயஸ் வாகனமும் கடும் சேதமடைந்துள்ளது.

இச் சம்பவத்தின் போது தெய்வாதீனமாக உயிழப்புக்களோ அல்லது காயங்களோ எதுவும் ஏற்படவில்லை.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# அறிவிப்பாளர் போட்டியில் மாகாணமட்டத்தில் 2ஆம் இடம்



(குருமன்காடு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய வருடாந்த தேசிய விருதுப் போட்டியில் அறிவிப்பாளர் நிகழ்வில் வவுனியா இளைஞன் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய வருடாந்த தேசிய விருதுப் போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த ஜெகநாதன் சோபிதன் மாகாண மட்டத்தில் அறிவிப்பாளர் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மேலும் எதிர்வரும் தினங்களில் கொழும்பு மகரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தில் தேசிய மட்டப் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)



மன்னார் மாவட்ட எழுத்தாளரும் கவிஞருமான வை.கஜேந்திரனுடைய இயக்கத்தில் உருவாக்கப்பட்ட மூன்று குறுந்திரைப்படங்கள் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வை.கஜேந்திரனுடைய கதை திரைக்கதை வசனத்தில் உருவான அடி, கௌரவ பிச்சை மற்றும் குடி ஆகிய மூன்று குறுந்திரைப்படங்கள் ஒரே மேடையில் வைபவ ரீதியாக வெளியிட்டு வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம்
# வீ.ரி. செல்வராசா
## அவர்களுடனான சந்திப்பு

"யாழ்.மாவட்டம் காங்கேசன்துறையில் 1935. 07.30 ஆம் திகதி தில்லையர்–சின்னம்மா தம்பதியினரின் ஐந்தாவது மகனாகப் பிறந்தார். யாழ்.காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் மின் இணைப்பாளராக தனது பணியைத் தொடர்ந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இவர் முதல் முதலாக சத்தியவான்– சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாக நடித்தார். பின்னர் அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதியாகவும் சத்திய கீர்த்தி, நாரதர் போன்ற வேடங்களிலும் நடித்தார். ஆரம்ப நாட்களில் அதிகமாக பெண் பாத்திரங்களிலேயே நடித்து வந்தார். இவர் நாடக உலகில் நன்கு அறியப்பட்டவர். இவரின் கலைச் சேவைக்காக கலாபூஷண விருதையும் முதலமைச்சர் விருதையும் கலைஞான கேசரி விருதையும் கலைச்சுடர் விருதையும் கலைஞானச் சுடர் விருதையும் கலைச்செல்வன் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். தற்போது உடல்ரீதியாக இயலாத நிலையிலும் கலைத் தொண்டாற்றி வருகின்றார். பல்துறை விற்பன்னரான கலைச்சுடர் வீ.ரி. செல்வராசா அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுமாகின்றது."

**➢ காங்கேசன் துறை வசந்த கான நாடக்சபாவின் நெறியாளர் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வழிவந்து இசை நாடகம், நாடக மேடைப் பாடல்கள், நெறியாள்கை கலாபூஷணம் வீ.ரி. செல்வராசா உங்கள் கலையுலகப் பிரவேசம் தொடர்பாக கூறுங்கள்?**

எனது தந்தையார், அவருடைய தந்தையார் உறவினர்கள் எல்லோருமே தொழில் முறை நாடகக் கலைஞர்களாக இருந்தனர். எங்கள் ஊரில் உள்ள வீடுகளில் அதிகமாக நாடக மேடைப்பாடல்கள் எப்போதுமே இசைத்தபடி இருக்கும். இசைக் கலைஞர்களும் இணைந்து விட்டால் ஆர்மோனியம், மிருதங்கம் என்பவற்றோடு நாடக மேடைப் பாடல்கள் அரங்கேறும். அப்போதெல்லாம் இசை நாடகங்களுக்கு நல்ல கிராக்கி இருந்தது. கோவில் திருவிழாக் காலங்களில் இசை நாடகங்கள் தவறாது அரங்கேறும். ஆறு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் மேடையேற்றக்கூடிய வகையிலே நாடகங்கள் தயார் நிலையில் இருக்கும். கோவில் திருவிழாக் காரர்கள் இன்று என்ன நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த நாடகத்தை அன்று மேடையேற்றக்கூடிய வகையில் தயார் நிலையில் நடிகர்கள் மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்கள் இருப்போம். அனுபவம் முதிர்ந்த கலைஞர்களோடு இளைஞர்கள், சிறுவர்கள் என பலரும் நடித்து மேடையேறி மூத்த கலைஞர்களின் திறன்களைப் பற்றிப் பிடிப்போம். அந்த வகையில் எனது பன்னிரண்டாவது வயதில் 1977 ஆம் ஆண்டு சத்தியவான்– சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாக நடிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கு முன்பாக உள்ள வெற்றுக்காணி ஒன்றில் ஒவ்வொரு வாரமும் நாடகம் அரங்கேறும். 'ரிக்கெட்' நாடகமாக அது நடைபெற்றது. அந்த மேடையிலேயே சாவித்திரி பாத்திரம் ஏற்று நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. என்னோடு சத்தியவானாக சின்னராசா என்பவர் நடித்தார்.

எனது அம்மாவின் தந்தை அவரை இராமர் அண்ணாவி என்று அழைப்பார்கள். இவரும் இவரது குழாத் தினரும் செட்டி வர்த்தக நாடகம் எனும் இசை நாடகத்தை மேடையேற்றினார்கள். இந்த இசை நாடகத்தில் எனது சித்தப்பா, பெரியப்பா, தந்தையார் போன்றோர் நடித்தனர். அப்போது மிரு தங்க வாத்தியக் கருவி இருந்தது. ஆனால் ஆர்மோனிய இசைப்பெட்டி சுலபமாக கிடைக்காது. இதன் காரணமாக நாடகப்பழக்க வேளைகளில் சுருதிப் பெட்டி பாவனைக்கான தட்டுப்பாட்டை நீக்க கம்மாலையில் பாவிக்கப்படும் துருத்தியை எடுத்து காற்றுப்போகும் வாய்ப்ப க்கத்தில் சிறு கருவி ஒன்றை இணைத்து அந்தத் துருத்தியை அழுத்தி அழுத்தி எடுக்க சுருதிப் பெட்டியில் இருந்து வருவது போன்ற ஓசை வரும். அந்த சுருதியோடு பாடல்களைப் பாடுவோம். அந்த துருத்தியை எனது அம்மாவே வாசிப்பார். இவ்வாறு குடும்பமாகவே நாடக ஒத்திகையில் ஈடுபடுவோம். ஆரம்ப நாட்களில் அதிகமாக பெண் பாத்திரங்களிலேயே நான் நடித்து வந்தேன்.

**➢ நீங்கள் இதுவரை நடித்த நாடகங்கள் தொடர்பாக கூறுங்கள்?**

முதல்மேடை சத்தியவான்– சாவித்திரி. அதில் சாவித்தி ரியாக நடித்தேன். பின்னர் அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதியாகவும் சத்தியகீர்த்தி, நாரதர் போன்ற வேடங்களிலும் நடித்தேன். இந்த அரிச்சந்திரா நாடகம் சம்பூர்ண அரிச்சந்திராவாகவும் தனியே மயான காண்டம் மட்டுமா கவும் நடைபெறுவதுண்டு. சம்பூர்ண அரிச்சந்திரா மேடையேறும் போது அது முழு இரவு முழுவதும் நடைபெறும். அதனால் முன்பின் என்று நடிகர்கள் நடிப்பது வழமை. முன் அரிச்சந்திரன், பின் அரிச்சந்திரன், முன் சந்திரமதி, பின் சந்திரமதி, முன் லோகிதாஸன், பின் லோகிதாஸன், என நடிகர்கள் மாறுவதுண்டு. அப்போது சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் பல்வேறு பாத்திரங்களையும் நான் நடிப்பதுண்டு. இன்னும் ஸ்ரீ வள்ளி நாடகத்தில் வள்ளி, நாரதர் போன்ற பாத்திரங்களிலும் கோவலன் –கண்ணகி நாடகத்தில் கண்ணகி, மாதவி போன்ற பாத்திரங்களிலும் நடித்துள்ளேன். இந்தக் கோவலன்– கண்ணகி நாடகத்தில் நடிமணி வைரமுத்து கோவலனாக நடிக்க சோகுசோபித சொர்ணக்கவிக் குயில் வி.கே.இரத்தினம்(அரியாலை) கண்ணகியாக நடிப்பார். இன்னும் சாரங்கதரா நாடகத்தில் சித்திராங்கி எனும் பெண் வேடத்தில் நடித்தேன். எல்லோரது உள்ளங்களையும் கொள்ளை கொண்ட ஓர் இசை நாடகம் தான் ஏழு பிள்ளை நல்லதாங்கள். இந்த நாடகத்தில் நல்லதங்களாகவும் சிற்சில வேளைகளில் மூளி அலங்காரியாகவும் நடித்துள்ளேன். ஞானசௌந்தரியில் ஞானமாகவும் பவளக் கொடியில் சுமித்திரை, பவளக்கொடி போன்ற பாத்திரங்களிலும் நடித்துள்ளேன். குறிப்பிட்ட ஏழு, எட்டு நாடகங்கள் தான் நடிப்பதுண்டு. ஆனால் அவை பல்லாயிரம் மேடைகள் கண்டவை.

**➢ தற்போதுவரை கலைத்துறையூடாக நீங்கள் பெற்றுக்கொண்ட விருதுகள், பட்டங்கள், மதிப்பளிப்புகள் தொடர்பாக பகிருங்கள்?**

2010 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதையும் 2016 ஆம் ஆண்டு முதலமைச்சர் விருதையும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞான கேசரி விருதையும் 2006 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் கலைச்சுடர் விருதையும் நல்லூர் பிரதேச செயலகத்தினால் கலைஞானச் சுடர் விருதையும் 2010இல் நல்லூரின் முத்துக்கள் எனும் விருது நல்லூர் கலாசாரப் பேரவையினாலும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட நாடக மன்றத்தால் கலைச்செல்வன் என்ற பட்டமும் 2011 இல் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் பாராட்டுச் சான்றிதமும் கிடைக்கப் பெற்றது. இவ்விருதுகள், பட்டங்கள், பாராட்டுச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்ற வேளைகளிலும் ஏனைய பல விழாக்களிலும் மாலைகள் அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டேன். இவ்வேளைகளிளெல்லாம் கலைத்துறையில் ஈடுபட்ட அந் நாட்களையும் எங்களுக்கு முன்னோடிகளாய் இருந்த கலைஞர்களையும் அண்ணாவி மார்களையும் நினைத்து கண்கலங்கி நன்றிக்கடன் செலுத்த தவறுவதேயில்லை.

**➢ தற்போது உடல்ரீதியாக இயலாத நிலையிலும் நீங்கள் கலைத்தொண்டாற்றி வருவதைக் காண முடிகிறது. அந்தவகையில் நீங்கள் நெறியாள்கை செய்த நாட கங்கள், நடிகர்கள் தொடர்பாக கூறுங்கள்?**

அரிச்சந்திரா மயானகர்ண்டம், சத்தியவான்–சாவித்திரி, பூதத்தம்பி போன்ற நாடகங்களை கலைஞர்கள் பலருக்கு நெறியாள்கை செய்துள்ளேன். இன்று வரை புதிய கலைஞர்கள் பலரும் என்னிடம் வந்து கற்றுச் செல்கின்றார்கள். அத்துடன் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் இசை நாடகங்கள் பலவற்றை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளேன். இன்னும் இந்தப் பணியில் தொடர்ந்திருப்பதையிட்டு மனநிறைவடைகின்றேன்.

**➢ கலையுலகில் நீங்கள் சந்தித்த உங்களோடு நடித்த கலைஞர்கள் தொடர் பாக சொல்லுங்கள்?**

நான் சந்தித்த, நடித்த கலைஞர்கள் எனும் போது உண்மையிலேயே அவர்கள் கலைக்காக தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்தவர்கள் என்றே சொல்ல வேண்டும். கலைமேல் அவர்கள் கொண்ட காதல், நேசம் என்பன அவர்களைக் கலையோடு இணைய வைத்தது. அதன் காரணமாக பல ஆண்டுகளாக அவர்கள் நாடகக் கலையைத் தொடர்ந்தார்கள். கலைத்துறையின் ஒவ்வொரு பக்கத்தையும் அவர்கள் அணுஅணுவாக சுவை த்து சுவைத்து அளிக்கை செய்தார்கள். முழு விசுவாசத்தோடும் அர்ப்பணிப் போடும் கலையுலகில் வீறுநடை போட்டார்கள். நடிகர் கள், பக்கப்பாட்டுக்காரர்கள், இசை வாத்தியக் கலைஞர்கள், ஒப்பனைக்கலைஞர்கள், மேடை அமைப் பாளர்கள், திரைகட்டுபவர் கள் எனப் பல்வேறு தரப்பினரின் பூரண ஒத்துழைப்புகளுடன் நாடகங்கள் மேடையேறும் போது அவற்றிலே தனிச்சிறப்பு இருந்தது. முழு இரவும் கலஞர்களை தூங்கவிடாது, கவனத்தைச் சிதையவிடாது, நாடகத்தை நடத்திக் காட்ட வேண்டிய அவசியம் கலைஞர்களுக்கு இருந்தது. அதற்கு ஏற்ற விதத்தில் மேடை அமைப்பு, காட்சி அமைப்பு என்பனவற்றை அமைப்பாளர்கள், நகைச் சுவைக் காட்சிகள் என்பன இரகசிகர்களை கலகலப்பாக வைத்துக் கொள்ளும். அந்த வகையில் நடிகமணி வி.வி. வைரமுத்து நாடகத்துறையின் சகல பக்கங்களிலும் வல்லவராக விளங்கினார். ஆரம்பத்தில் (ஸ்திரிபார்ட்) அதாவது பெண்பாத்திரத்திலேயே அவர் நடித்தார். பின்னாளில் கதாநாயகன் வேடங்களில் நடித்து நாடக உலகில் முடிசூடா மன்னனாக விளங்கினார். ஆர்மோனியம் வாத்தியத்தையும் சிறப்பாக இசைப்பார். சகல நாடகங்களின் வரிசையும் குறைந்த நடிகர்களைக் கொண்டே முழுமையான நாடகத்தை மேடையேற்றும் வல்லமையையும் அவர் கொண்டிருந்தார். அவரால் செதுக்கப்பட்ட கலைஞர்கள் பலர் பின்னாட்களில் சிறந்த கலைஞர்களாகவும் நெறியாளர்களாகவும் விளங்கினார்கள். விளங்குகிறார்கள். ஆர்மோனியம் இசைப்பதில் பிள்ளைநாயகம், நாகமுத்து, சின்னத்துரை (யோசேப்பு) பிலிப்பு ஜோன் கவாஸ் போன்றோர் முதற்தரமானவர்கள். இன்றும் மிருதங்கம் வாசிப்பதில் காசிநாதர், அருமைநாயகம், பொன்னுச்சாமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். நடிகர்கள் வரிசையிலேயே வதிரியில் அண்ணாச்சாமி (ஆசிரியர்) மிகச் சிறந்த இசை நாடக நடிகராகவும் இயக்குநராகவும் பாடகராகவும் விளங்கினார். காளிதாஸ், சத்தியவான்–சாவித்திரி, அரிச்சந்திரா போன்ற நாடகங்கள் இவருக்கு பெரும் புகழை வழங்கி இருந்தன.

மேடை, திரை என்பவற்றை இவரே அமைத்து நாடகங்களை மேடை ஏற்றுவார். அதிகமான திசை ஓவியங்களை இவரே வரைந்திருந்தார். சோகுசோபித சொர்ணக் கவிக்குயில் வீ.கே. இரத்தினம் இவர் பெண் பாத்திரங்களில் நடிப் பதில் மிக வல்லவர் . சந்திரமதி, சாவித்திரி, கண்ணகி ,ஞான சௌந்தரி போன்ற பாத்திரங்கள் ஊடாக இவரை அப் பாத் திரங்களாகவே நாம் கண்டோம். ஏழு பிள்ளை நல்லதங் காள் நாடகத்திலே இறுதிக் கட்டத்திலே ஏழு பிள்ளைகளையும் கிணற்றுள் போட்டு விட்டு தானும் விழுந்து இறக்கும் காட்சியிலேயே கண்கலங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது.

நடிக கலாமணி வ.செல்வரத்தினம் நீண்ட காலமாக மேடையை அலங்கரித்த கலைஞர். இருவரும்ஏற்காத வேடம் இல்லை என்றே சொல்லலாம். மூத்த தலைமுறை கலைஞர்களோடு நடித்து அடுத்த தலைமுறை கலைஞர்களான தைரியநாதன், இ. கனகரத்தினம் போன்றோருடன் நடித்து மூன்றாம் தலைமுறை கலைஞர்களான எஸ்.ஜீ. சாந்தன் போன்றோருடனும் நடித்த ஓர் அற்புதமான கலைஞர். மார்க்கண்டு வயாவிளான் மார்க்கண்டு என்று விழிக் கப்படுபவர். இயமன், விசுவாமித்திரர், தோட்டி அமரால் (பூதத் தம்பி) போன்ற பாத்திரங்கள் இவருக்கு புகழைச் சேர்த்தன.

நெல்லியடி நற்குணம் – சத்தியகீர்த்தி நேரிலே வந்தது போன்ற ஒரு மயக்கத்தை ஏற்படுத்துபவர். அயானு பாகு வான தோற்றம் கொண்டவர். மேடை நாடகப் பாடல்கள் சகலவற்றையும் பாடும் வல்லமை கொண்டவர். முன் அரிச்ச ந்திரன், காசிராசன், பூதத்தம்பி பாத்திரங்களும் இவருக்கு சிறப்பைக் கொடுத்திருந்தன. தைரியநாதன் ஆண் பாத்திரங்கள், பெண் பாத்திரங்கள் என எல்லாவற்றையுமே நடிக்கும் வல்லமை கொண்டவர். திறன்மிகு நெறியாளர், இணுவில் கனகரத்தினம், பெண் வேடங்களே அதிகம் போட்டவர், சந்திரமதி, சாவித்திரி, வள்ளி போன்ற பாத்திரங்கள் ஊடாக தனது திறமைகளை வெளிக்கொணர்ந்தவர். இவர்களோடு நாயன் மார்க்கட்டு கனகரத்தினம், மாவை.கலட்டி சரவணமுத்து, வி.கே.பாலசிங்கம், வி.கே.செல்லத்தம்பி, உசன் இராசரத்தினம், கா.விமலநாதன், போன்றோரும மறக்கமு டியாத கலைஞர்களாவர். இவர்களோடு இணைந்தி ருந்த காலங்கள் உண்மையிலேயே மறக்க முடியாத காலங்கள் என்றே சொல்ல வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் உடன் அமுல்படுத்தப்பட்டால் ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் சட்டம் உடனடியாக நாடாளுமன்றில் அமுல்படுத்தப்பட்டால் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான சுற்றறிக்கை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதால் தேர்தல் ஆணைக்குழுவினால் உடனடியாக எதனையும் செய்ய முடியாது.



நாம் எதிர்பார்த்தவாறு செப்டெம்பர் மாத இறுதியில் அல்லது ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் அனைத்து பணிகளும் நிறைவடைந்தால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த முடியும்.

எனினும், நாடாளுமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி தேர்தல் சட்டத்தினை உடனடியாக அமுல்படுத்தினால் மட்டுமே இது சாத்தியமாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஹிட்லரும் பிரபாகரனும் இலங்கைக்கு தேவையில்லை

## ஐ.தே.க. ஊடகப்பேச்சாளர் உறுதி



(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமை விஜயகலா மகேஸ்வரன் கொழும்புக்கு வருவார். அப்போது அவரிடம் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருகின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விஜயகலாவின் கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தல்ல. அது அவருடைய தனிப்பட்ட கருத்து. வடக்கில் பிரபாகரனையும், தெற்கில் ஹிட்லரையும் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை.

அத்துடன், இந்த நாட்டுக்கு ஹிட்லரும் பிரபாகரனும் தேவை இல்லை. ஆகவே விஜயகலாவின் இந்தக் கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்தாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு குப்பைகளை இறக்குமதி செய்யத்திட்டம்

## அரசு மீது பந்துல குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் உலக நாடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வரி விலக்குடன் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பிரகாரம் உலக நாடுகளிலுள்ள குப்பைகளை வரி விலக்குடன் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுகாதாரக் கழிவுகள், நகரக் கழிவுகள், வைத்தியசாலை இரசாயன கழிவுகள் உட்பட உலக நாடுகளிலுள்ள குப்பைகளை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில் மீதொட்டமுல்லையிலுள்ள குப்பைகளை அகற்றமுடியாத நிலை இருக்கும் சந்தர்ப்பத்தில் உலக நாடுகளிலுள்ள குப்பைகளை இங்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இறக்குமதி செய்யப்படும் குப்பைகளை வகைப்படுத்தி களஞ்சியப்படுத்துவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் மின்சாரம் வழங்கல் மற்றும் வேறு சேவைகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

எனவே குப்பை முகாமைத்துவத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு எந்தவொரு நாடும் வரையறையின்றி முதலீடு செய்வதற்கும் வழி வகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இந்த உடன்படிக்கையானது ஜனாதிபதி, அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தை ஏமாற்றும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா சற்குணம் சமாதான நீதவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவராகவும் கிராமிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# விமல் மீது சீறிச் சினந்த சபாநாயகர் அமைதியான ஆசனத்தில் அமர்ந்தார்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் விஜயகலா வெளியிட்ட கருத்து தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாரிய குழப்பநிலை ஏற்பட்டது.

தாம் சுதந்திரமாக வாழ மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு கட்டியெழுப்பப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் விஜயகலா குறிப்பிட்டமையால் இந்த குழப்ப நிலை ஏற்பட்டது.

அவரின் கருத்து தொடர்பில் நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இதன்போது இதுவொரு சட்டவிரோதமான கருத்து எனவும், விஜயகலாவுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிக்கக்கூடாதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதன் போது கோபமடைந்த சபாநாயகர் "இப்படி கூச்சலிட்டால் விமல் வீரவன்சவை சுட்டிக்காட்ட நேரிடும். நாடாளுமன்றத்தை வைத்தே நாட்டை ஆட்சி செய்ய வேண்டும். மக்களுக்கு சேவை செய்யவே நாடாளுமன்றம் உள்ளது. உங்கள் விருப்பத்திற்கமைய செயற்படுவதற்கல்ல.

இங்கு பலர் பல கருத்துக்களை வெளியிட்டவர்கள் உள்ளனர். விமல் வீரவன்ச



எப்படி இவ்வாறு பேச முடியும். நாடாளுமன்றத்திற்கு குண்டுவைத்து தகர்க்க வேண்டும் என்கூறிவிட்டு இன்று நல்லவர் போன்று காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றீர்களா? அமைதியாக அமருங்கள்" எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து வீரவன்ச இருக்கையில் அமர்ந்து கொண்டார். (இ-7)



யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட விசேட கல்வி மாணவர்களுக்கான வலயமட்டப் போட்டிகள் அண்மையில் கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# காவிரியின் வெற்றிக்கு தமிழக அரசே காரணம்

## ராமலிங்கம் கூறுகிறார்



(சென்னை)

காவிரியின் வெற்றிக்கு காரணம் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும், துணை முதல்வர் ஓ.பன்னீர்ச் செல்வமும்தான் என, ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்படி தெரிவித்தார்.

ஐம்பது ஆண்டுகால ஒப்பந்தத்தை மீறி, 1969 ஆம் ஆண்டு கர்நாடகா அரசு காவிரிக்கு குறுக்கே பல்வேறு அணைகளை கட்டியது. ஆனால் அந்த நேரத்தில் ஆட்சியிலிருந்த தி.மு.க. அதுகுறித்து கவலை கொள்ளவில்லை.

எனினும் எம்.ஜி. ஆர் தனது ஆட்சியில் காவிரி நீரை பெற்றுக் கொள்ளும் முதல் அடியை ஆரம்பித்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா காவிரி நீரை தமிழகத்திற்கு பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததோடு, வழக்குகளையும் தாக்கல் செய்தார்.

அதன் தொடராகவே இன்று காவிரி நீர் தமிழகத்திற்கு கிடைத்துள்ளது. எனவே அதையெல்லாம் மறந்து காவிரியின் வெற்றியில் தமக்கும் பங்குள்ளது என தி.மு.க. கூறுவது நியாயமற்றது என மேலும் கூறினார். (7-8)

# கயிலாய யாத்திரையில் நிலச்சரிவு மூன்று பேர் உயிரிழப்பு

## 19 தமிழர்கள் உட்பட 143 பேர் மீட்பு



(சென்னை)

கயிலாய யாத்திரைக்காக சென்ற இந்தியர்கள் நிலச்சரிவில் சிக்கித் தவிக்கும் நிலையில், இதுவரை 143 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள தாகவும், மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ் அசம்பாவிதத்தில் 1,500 இந்தியர்கள் சிக்கியுள்ளதாகவும், இதுவரை மீட்கப்பட்டவர்களில் 19 பேர் தமிழர்கள் என்றும், இரண்டு பெண்கள் ஒரு வயோதிப ஆண் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ள தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள திபெத்திய பகுதியில், கயிலாயமானசரோவர் ஏரி அமைந்துள்ளது.

இங்கு சென்று வழிபாட்டை மேற்கொள்ள பக்தர்கள் யாத்திரை மேற்கொள்வது வழக்கம். எனினும் குறித்த பகுதிக்கு செல்வதற்கு, நேபாளத்தின் மலை வழிப் பாதையூடாகவே செல்ல வேண்டும். இந்நிலையில் வழமை போன்றே இம்முறையும் பக்தர்கள் யாத்திரைக்காக சென்றுள்ளனர்.

ஆனால், நேபாளம் எங்கும் காலநிலை மழை மற்றும் நிலச்சரிவு என மோசமாகவுள்ளதால், கயிலாய மானசரோவரை சென்றடைந்த பக்தர்கள் மீண்டும் திரும்ப முடியாத நிலையில் சிக்கி தவிக்கின்றனர்.

இவ்வாறு சிக்கியவர்களில் 1,500 இற்கும் மேற்பட்டோர் இந்தியர்கள் எனத் தெரிய வருகின்றது.

இந்நிலையில் இதுவரை 143 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, அதில் 19 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (7-8)

# பிரிக்கப்பட்ட கு... பெற்றோரிடம் மீள...



# பாகிஸ்தானில் கடும் மழை, ஏழு பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த 38 ஆண்டுகளுக்கு பிறகு சுமார் 238 மி.மீ அளவு மழை பெய்து பெரும் பகுதியை வெள்ளக்காடாக மாற்றியுள்ளது.

இந்த மழையால் பல்வேறு பகுதிகளில் மின்சாரம் மற்றும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, படகுகள் மூலம் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மழையின் பாதிப்பால் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட விபத்துக்களால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.



மேலும், அடுத்த 24 மணி நேரத்துக்கு மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால் மீட்புப்படையினர் எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருகின்றனர். (7-8)

# பெற்றோல் கொள்முதல் தடைசெய்யப்பட்டால் வளைகுடா முழுவதிலும் பாதிப்பு ஏற்படும்

## ட்ரம்புக்கு ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை

(டெஹ்ரான்)

ஈரானிடம் இருந்து பிற நாடுகள் பெற்றோல் கொள்முதல் செய்ய அமெரிக்கா தடை விதித்ததற்கு ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் வரலாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது.

ஆனால், ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை விட்டு அமெரிக்கா வெளியேறுவதாக சில மாதங்களுக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். மேலும், ஈரான் மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

இந்நிலையில், ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்குள் இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்திக்கொள்ள வேண்டும், இல்லையேல் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என அமெரிக்கா மிரட்டல் விடுத்து இருந்தது.



ஈரானிடம் பெற்றோல் கொள்முதல் செய்ய தடை விதித்தால், வளைகுடா முழுதும் பெற்றோல் கொள்முதல் செய்யப்படுவது பாதிப்பை ஏற்படுத்தும் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி தெரிவித்துள்ளார்.

அரசு முறை பயணமாக சுவிட்சர்லாந்து சென்றுள்ள ஹசன் ரவுகானி, செய்தியாளர்களிடம் கூறுகையில், 'ஈரானிடம் இருந்து பிற நாடுகள் பெற்றோல் கொள்முதல் செய்வதை முற்றிலும் நிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஆனால், அவர்கள் கூறியதன் அர்த்தம் அவர்களுக்கே புரியவில்லை. ஈரான் நாட்டின் பெற்றோல் கொள்முதல் தடை செய்யப்பட்டால் வளைகுடா நாடுகளின் பெற்றோல் கொள்முதலிலும் அது பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ழந்தைகள் ...ா ஒப்படைப்பு

### ட்ரம்ப் நடவடிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்குள் அகதிகளாக வருபவர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகள் அவர்களின் பெற்றோர்களுடன் மீண்டும் இணைந்துள்ளனர்.

ட்ரம்பின் கொள்கைக்கு அமைய அமெரிக்காவிற்குள் நுழையும் அகதிகளிடமிருந்து அவர்களின் குழந்தைகள் பிரிக்கப்பட்டு எல்லையோர காப்பகங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்ததையடுத்து, தனது கொள்கையிலிருந்து பின்வாங்கிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பிரிக்கப்பட்ட குழந்தைகளை பெற்றோரிடம் ஒப்படைக்க அனுமதிக்கும் வகையில் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டிருந்தார்.

இந்நிலையில், பிரிக்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் அவர்களின் பெற்றோர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

ட்ரம்பின் குடியேற்றக் கொள்கையை எதிர்த்து வெள்ளை மாளிகை முன்பாக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்ததோடு அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் இதே கோரிக்கையை வலியுறுத்திப் பேரணிகள் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-8)

## இந்தோனேஷியாவில் படகு விபத்து; 29 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் குழந்தைகள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேஷியாவின் சுலாவெசி தீவில் இருந்து 139 பயணிகளுடன் சிலாயர் தீவை நோக்கி படகு சென்று கொண்டிருந்தது. படகு, துறையில் இருந்து 300 மீற்றர் சென்ற போது மோசமான வானிலை காரணமாக எழுந்த பேரலைகளில் சிக்கி படகு மூழ்கியுள்ளது.



இந்த படகு விபத்தில் சிக்கி குழந்தைகள் உட்பட 29 பேர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், இதில் 74 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமற்போன ஏனையோரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் இந்தோனேஷியாவின் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பல்வேறு தீவுகளை கொண்ட நாடான இந்தோனேஷியாவில் மக்களின் பொது போக்குவரத்து படகுகள்மூலமே இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (7-8)

## பட்டாசு தொழிற்சாலையில் தீ பத்துப்பேர் உடல் கருகி பலி

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலத்தில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 10 பேர் பரிதாபமாக உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

தெலுங்கானா மாநிலம், வாராங்கல் மாவட்டத்தில் உள்ள பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இதில், தொழிற்சாலையினுள் இருந்த 15 பேரில் பெண்கள் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 10 பேர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.



மேலும், 3 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீதம் உள்ள இரண்டு பேர் பற்றிய விபரம் எதுவும் வெளியாகவில்லை. மின்கசிவு காரணமாக தொழிற்சாலையில் தீ விபத்து நிகழ்ந்துள்ளது. தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தீ விபத்து குறித்து தொழிற்சாலையின் உரிமையாளர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தரப்பில் தெரிவித்தனர். (7-8)

## சுட்டெரிக்கும் வெயில்! ஆறு பேர் உயிரிழப்பு

(டொரண்டோ)

கனடாவில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக மொண்ட்ரியல் நகரில் 6 பேர் பலியாகி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கனடாவில் கடும் வெப்ப நிலை நீடித்து வருகிறது. இதனால் நாட்டின் மேற்குக் கடலோரப் பகுதி முழுவதும் கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

அப்பகுதி மக்கள் கடும் வெப்பத்தாலும், புழுக்கத்தாலும் புலம்பிக் கொண்டிருக்கின்றனர். காட்டுத் தீயும் அங்கு கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது. மத்திய கனடாவில் அமைந்துள்ள மொண்ட்ரியல் நகரில் வெயில் சுட்டெரித்து வருகிறது. இந்த வெயிலுக்கு இதுவரை 6 பேர் பலியாகியுள்ளனர்.

தேவையில்லாமல் யாரும் வெளியில் வரவேண்டாம். மேலும், வெயி... கொடுமையில் இருந்து தப்பிக்க நீச்சல் குளங்களை நீண்ட நேரம் திறந்து வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (7-8)

## முன்னாள் மலேசியப்பிரதமர் பிணையில் விடுதலை

(கோலாலம்பூர்)

ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் 1 மில்லியன் ரிங்கிட் ($247,000) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அவர் விசாரணைகளின் பின்னர் நேற்றுக்காலை, பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனையடுத்த அவரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியமை தொடர்பாக ஒரு குற்றச்சாட்டும் அரச நிதியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் 3 குற்றச்சாட்டுக்களும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஒவ்வொன்றிற்கும் தலா 20 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## எங்கள் நாட்டு மேகக்கூட்டங்களை இஸ்ரேல் அரசாங்கம் திருடிவிட்டது

### ஈரான் விசித்திரக்குற்றச்சாட்டு



(டெஹ்ரான்)

எங்கள் நாட்டு மேகக் கூட்டங்களை இஸ்ரேல் திருடிவிட்டதால் வறட்சி நிலவுகிறது என ஈரான் விசித்திரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

ஈரான் நாட்டின் பாதுகாப்புத் துறை இயக்குநர் கோலாம் ரேசா ஜலாலி பத்திரிகையாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் ஈரானில் பருவநிலை மாறிவருவது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த பருவநிலை மாற்றத்தில் வெளிநாட்டு தலையீடு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது.

இந்த பிராந்தியத்தில் இஸ்ரேல் மற்றும் மற்றொரு நாட்டின் கூட்டுக் குழு ஒன்று உள்ளது. இந்தக் குழுவானது, ஈரான் வான் எல்லைக்குள் வரும் மேகக் கூட்டங்கள் மழை பொழியாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான பணியை செய்கின்றன. ஆப்கானிஸ்தானில் இருந்து மத்திய தரைக்கடல் பகுதி வரையிலான மலைப்பகுதிகளில் 2200 மீற்றர் அளவுக்கு பனி படர்ந்துள்ளது. ஆனால் ஈரானில் மட்டும் இல்லை. மேகம் மற்றும் பனி திருட்டு காரணமாக நாம் வறட்சியை எதிர்கொண்டிருக்கிறோம் எனக் கூறினார்.

தங்கள் நாட்டு மழை வளத்தை திருடுவது தொடர்பாக ஈரான் அதிகாரிகள் மற்ற நாட்டின் மீது குற்றம்சாட்டுவது இது முதல் முறையல்ல. முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அகமதிநிஜாத் 2011இல் மேற்கத்திய நாடுகளை இவ்வாறு குறை கூறியமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## பாகிஸ்தான் தேர்தல் பயங்கரவாதக் கட்சியில் 13 பெண்கள் போட்டி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தேர்தலில் அல்லா-ஓ-அக்பர் தெக்ரிக் கட்சி சார்பில் போட்டியிடும் பயங்கரவாத சயீத் கட்சியில் 13 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

பாகிஸ்தானில் எதிர்வரும் 25 ஆம் திகதி பாராளுமன்றம் மற்றும் சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது.

அதில் பயங்கரவாதி ஹபீத் சயீத்தின் மில்லி முஸ்லிம் லீக் (எம்.எம்.எல்.) கட்சியும் போட்டியிடுகிறது.

இக்கட்சிக்கு பாகிஸ்தான் தேர்தல் கமிஷன் அங்கீகாரம் வழங்கவில்லை. எனவே, அல்லா-ஓ- அக்பர் தெக்ரிக் கட்சியின் சார்பில் இவர்கள் களம் இறங்கியுள்ளனர்.

இக்கட்சியின் சார்பில் மொத்தம் 260 பேர் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர். அவர்களில் 79 பேர் பாராளுமன்றத்துக்கும், 181 பேர் சட்டசபை தேர் தலிலும் களமிறங்கியுள்ளனர். (7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்தெனிய இளைஞர்களுக்கு ஒரு சட்டம் விஜயகலாவுக்கு ஒரு சட்டமா? ஞானசாரர்

(கொழும்பு)

தெல்தெனிய இளைஞர்களுக்குப் போன்றே விஜயகலாவுக்கும் இந்நாட்டு சட்டம் பொருந்தும் எனவும் இந்த நாட்டின் அதிகாரிகள் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தை வைத்து விஜயகலாவை என்ன செய்யப் போகின்றார்கள் என்பதைப் பார்ப்போம் எனவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஒரு நாட்டுக்குள் ஒரு சட்டமே இருக்க வேண்டும். அது வடக்குக்கும் தெற்குக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். வடக்கினதும் கிழக்கினதும் வாக்குகளை இலக்கு வைத்து இனவாதக் கருத்துக்களை முன்வைத்து வரும் விஜயகலா போன்றவர்களுக்கு என்ன தண்டனை என்பதை நாம் அவதானித்துக் கொண்டே



இருக்கின்றோம் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் கோட்டே ஸ்ரீகல்யாணி தர்ம மகா சபையின் மகாநாயக்கரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் புலிகள் மீள் உருவாக்கம் குறித்த சர்ச்சை உரைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் போதே ஞானசாரர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# வேலையற்ற பட்டதாரிகள் மறியல் போராட்டத்தில்



(கொழும்பு)

மத்திய மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கண்டி பல்லேகலை மத்திய மாகாண சபை முன்பாக மறியல் போராட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடியாக ஆசிரியர் நியமனம் பெற்றுத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய மாகாண சபை பிரதான வாயில்கள் இரண்டையும் மறித்து மறியல் போராட்டத்தில் பட்டதாரிகள் ஈடுபட்டபோது. மாகாண சபை மாதாந்த அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தயாசிறி ஜெயசேகர ஒரு செல்லாக்காசு! ரோஹித அபேகுணவர்த்தன விமர்சனம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர ஒரு செல்லாக்காசு. எந்தப் பெறுமதியும் அற்றவர் என்று கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன விமர்சித்துள்ளார்.

அரசாங்கத்தை விட்டு ஒதுங்கியிருந்த போதிலும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ள, தான் தயாரில்லை என்றும் சிலர் தன்னை அவ்வாறு நிர்ப்பந்தப்படுத்துவதாகவும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் ரோஹித அபேகுணவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தயாசிறியை மேற்கண்டவாறு விமர்சித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியில் இணைத்துக் கொள்ளும் அளவுக்கு அவர் ஒன்றும் முக்கியமானவர் கிடையாது. அதேநேரம் அடிக்கடி கட்சி மாறும் அரசியல்வாதி என்ற பெயர் பொதுமக்கள் மத்தியில் உண்டு.

குருநாகல் மாவட்டத்தில் எங்கள் பொதுஜன பெரமுன கட்சியை வளர்க்க ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாலிந்த திஸாநாயக்க போன்றோர் இருக்கின்றார்கள். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தயாசிறி இல்லாமலேயே நாங்கள் குருநாகல் மாவட்டத்தை வெற்றி கொண்டோம்.

அவருக்கு கூட்டு எதிர்க்கட்சி தேவையில்லை என்றால் என்றைக்குமே அவர் எங்களுக்குத் தேவையில்லை. அதுதான் எங்கள் நிலைப்பாடு என்றும் ரோஹித அபேகுணவர்த்தன மேலும் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# அடிபணிந்து பொது எதிரணியில் சரணடைவதற்கு தயாரில்லை

(கொழும்பு)

சொந்த வீட்டைக் கைவிட்டுவிட்டு வாடகை வீட்டில் குடியேறமாட்டோம். அடிபணிந்து சென்று பொது எதிரணியில் உறுப்புரிமை பெறவும் மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் 16 பேர் கொண்ட அணியைக் கடுமையாக விமர்சித்து வரும் பிரசன்ன ரணதுங்க எம்.பிக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதம நிறைவேற்று அதிகாரி குழம்பிப்போனால் கம்பனி திடீரென வீழ்ச்சியடையும். இப்படியொரு நிலைதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ளது.

கம்பனியொன்று சரிவை எதிர்கொண்டால் அதை மீளக் கட்டியெழுப்புவது பற்றியே சிந்திக்கவேண்டும்.

அத்துடன், மற்றுமொரு நிறுவனத்தில் இணைவது தீர்வாகாது. எனவே, சுதந்திரக் கட்சியை மீளப் பலப்படுத்துவதே எமது நோக்கம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உறுப்புரிமையை எடுக்க மாட்டோம்.

நாம் இரு பக்கங்களும் கால் வைக்கவில்லை. எமக்கு சொந்த வீடு (சுதந்திரக் கட்சி) இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்

## அமைச்சர் ஹரின் வலியுறுத்து

(கொழும்பு)

"நியூயோர்க் ரைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது எனக் கூறும் மகிந்த ராஜபக்ஷ அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முன்வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனத் துறைமுக நிறுவனத்திடம் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 7.6 பில்லியன் ரூபாவை கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காகப் பெற்றுள்ளார் என நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியானது பல உண்மைகளை வெளிக் கொண்டுவரும் ஆரம்பக்கட்டமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு சர்வதேச தரம் பெற்ற பத்திரிகை பொய்யான விடயங்களைப் பரப்பி மக்கள் மத்தியில் வதந்தியை ஏற்படுத்துவதற்கான அவசியம் ஏதும் கிடையாது. ஆகவே, அந்த பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி பொய்யாயின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முன்வர வேண்டும்.

ஆனால், அவரை தவிர்த்து அவரது கட்சியின் உறுப்பினர்களே தற்போது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இவ் விடயம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ பின்வாங்குவது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# 'டாண்' மனிதர் ஆவோம்!

இந்தியன் பங்சுவாலிட்டி என்று நம்மை நாமே கேலி செய்து கொள்ளுமளவிற்குத் தான் நேரத்தைக் கடைப்பிடிக்கும் விடயத்தில் பெரும்பாலானவர்கள் நடந்து கொள்கிறார்கள். பாடசாலைக்கு தாமதமாக வரும் மாணவனை ஆசிரியர் கேட்பார் ''ஏன் லேட்?'' லேட் ஆயிடுச்சு சேர். ஆசிரியர் மடக்குவார். லேட் ஆயிடுச்சா? இல்லை லேட் ஆக்கிட்டியா? மாணவன் திணறுவான்.

உண்மை இதுதான். ஓர் இடத்திற்குத் தாமதமாகச் செல்வதற்கும், குறிப்பிட்ட நேரத்தைக் கடைப்பிடிக்க முடியாமல் போவதற்கும் மூன்று காரணங்கள் தாம் இருக்க முடியும். முதல் காரணம், நமக்குத் தாமதமானால் என்ன இப்போது என்கிற அலட்சிய உணர்வு. இரண்டாவது நம் நேரத்தை, பணிகளை, நாம் ஒழுங்கு செய்து கொள்ளாமல் இருப் பது. மூன்றாவது எதிர்பாராத தடை (இது மன்னிக்கக் கூடியது).

நேரத்தை நாம் மட்டும் கடைப் பிடித்தால் போதுமா? மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டாமா? என்று வாதிடுபவர்களும் உண்டு.

''என் நண்பனும் நானும் திரைப்படத்திற்குப் போவதென முடிவாகி, திரையரங்கு வாசலில் மாலை 6.15 இற்குச் சந்திப்பது என ஏற்பாடாயிற்று. அவன் வந்தது 6.50 இற்கு. இப்படிப்பட்டவர்களுடன் என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று ஒரு நண்பர் சலிப்புடன் பேசினார்.

"இது ஓர் ஐந்தாண்டுத் திட்டம் நண்பரே! நீங்கள் இதில் தொடர்ந்து உறுதி காட்டுங்கள்" ஐயோ ! அந்தாளா? சொன்ன நேரத்துக்கு டாண்ணு வந்து தொலைச்சுடுவானே என்று பெயரெடுங்கள். அப்புறம் பாருங்கள். "மற்றவர்கள் மாறுகிறார்களா, இல்லையா? என்று" என்றேன்.

தி.நகரில் தியாகராசா வீதியில் ஒரு புகழ்மிக்க பஸ் நிறுவனம் இருக்கிறது. இங்கு 8 இற்கு ஒரு பஸ். 8.05 இற்கு ஒரு பஸ். மதுரைக்கும் பயணிகள் வரவேண்டிய நேரம் முறையே 7.45 என்றும் 8 என்றும் டிக்கெட்டில் இருக்கும். பயணிகள் அலறியடித்துக் கொண்டு நேரத்திற்கு வரு கிறார்கள். காரணம் ஆள் வந்தாலும் வராவிட்டாலும் டாண் என்று 8 இற்கும் 8.15இற்கும் சரியாகப் பஸ்கள் புறப்பட்டு விடுகின்றன.

நாடகக் காவலர் மனோகரின் நாடகம் 7 இற்கு என்றால் 6.55 இற்கு அரங்கு நிரம்பி விடும். குன்றக்குடி அடிகளார் (முனைவர்), முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் போன்றவர்கள் நேர விடயத்தில் நெருப்பு. 6.30 இற்குக் கூட்டம் என்றால் 6.30 இற்கு ஆரம்பித்தாக வேண்டும் இவர்களுக்கு. ஆக, நாம் ஆரம்பித்து வைத்தால் போதும். மற்றவர்களைக் காரணம் காட்டிக் கொண்டிருந்தால் இந்த நல்ல பழக்கம் வளரா. பரவவும் பரவாது. நேரத்தைக் கடைப் பிடிப்பது என்பது ஒரு நல்ல பழக்கம் மட்டுமல்ல. அது சில நல்ல பழக்கங்களின் கலவை. முதலாவது, நாம சொன்ன வார்த்தையை நாம் காப்பாற்றுகிறோம் என்பது. இரண்டாவது மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கிறோம் என்பது. மூன்றாவது திட்டமிடுவதில் நாம் வல்லவர்களாகி வருகிறோம் என்பது. ஓர் உண்மையைச் சொல்லட்டுமா?

நேரத்தைக் கடைப்பிடிப்பவர்களை மற்றவர்களைவிட நாம் சற்று அதிகமாகவே நம்பலாம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் நாள் பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் கலந்து கொண்டனர்.

# நல்லிணக்கப் பொறிமுறையைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை-அமைச்சர் பாராட்டு



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் அதேவேளை, இன மற்றும் மத ஐக்கியத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும் என சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை ருகுணு மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம். தேவாலயத்தில் இடம்பெற்றது. இதில் அமைச்சர் ஜோன் அமரதுங்க கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது தேசிய நல்லிணக்கப் பொறிமுறையைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை ஒரு பன்மைத்துவ நாடாகும். அதனால், நாட்டுப் பிரஜைகளின் மத சுதந்திரத்திற்கு ஒரு போதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த தேவாலயத்தில் ஒவ்வொரு வருடமும் திருவிழாவை நடத்துவதற்காக பௌத்த மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் ஆதரவையும் சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராட்டிப் பேசினார். (இ-7)

# பிறவியிலேயே கையை இழந்த மாணவிக்கு ஜனாதிபதியிடமிருந்து செயற்கை கை அன்பளிப்பு



(கொழும்பு)

சிறிபுர மத்திய மகா வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் பிறவியிலேயே கையை இழந்த என். பி.வனிதா தமயந்தி என்ற மாணவி தனக்கு செயற்கை கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உதவுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன் வைத்த வேண்டு கோளை நிறைவேற்றும் வகையில் அம் மாணவிக்கு ஜனாதிபதியால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து செயற்கை கை ஒன்று வழங்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி சிறிபுர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றில் ஜனாதிபதியை சந்தித்த இம் மாணவி, தனக்கு செயற்கை கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தேவையான உதவியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் குறித்த மாணவிக்கு பொருத்தமான செயற்கை கை ஒன்றை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அந்த வகையில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவிற்கு அறிவிக்கப்பட்டு இலங்கை இராணுவ புனர்வாழ்வு பணிப்பாளர் சபையின் கீழ் இயங்கும் நிலையமொன்றினால் இந்த செயற்கை கை உற்பத்தி செய்யப்பட்டதுடன், இதற்கான ஆலோசனை மற்றும் மூலப்பொருள் ஜெர்மனி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டது.

இந்த செயற்கை கையை உற்பத்தி செய்வதற்கு இரண்டு இலட்ச ரூபா செலவாகியுள்ளதுடன், இதற்கான நிதி ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்பட்டது.

பிறவியிலேயே கையை இழந்திருந்த இந்த மாணவி கல்வியில் சிறந்து விளங்குவதுடன், அவரது எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வகையில் விசேட கவனம் செலுத்தி அவருக்கு இந்த உதவியை பெற்றுக் கொடுத்ததற்காக அவரது பெற்றோர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

மாணவியின் பெற்றோர் மற்றும் இலங்கை இராணுவத்தின் புனர்வாழ்வு பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் எஸ்.கே. திருநாவுக்கரசு உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# விஜயகலாவை பதவி நீக்கி கைது செய்ய வேண்டும்

## நீதிக்கான பெண்கள் அமைப்பு வலியுறுத்து



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் குறித்து சர்ச்சைக் கருத்தை வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை பதவிநீக்கம் செய்து, கைது செய்யுமாறு நீதிக்கான பெண்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சரின் கருத்து தொடர்பாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் முறைபாடு செய்யவுள்ளதாகவும் குறித்த அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான பெண்கள் அமைப்பினரால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய, குறித்த அமைப்பின் இணைத் தலைவர் ஷர்மிளா கோனவள இதனைத் தெரிவித்தார்.

"தடை செய்யப்பட்ட அமைப்பொன்றை மீண்டும் உருவாக்கி இந்நாட்டு மக்களை ஆபத்தில் சிக்க வைக்கும் வகையிலான இராஜாங்க அமைச்சரின் கருத்து மன்னிக்க முடியாததொன்றாகும்.

அரசாங்கத்திலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்களின் இவ்வாறான சர்ச்சை கருத்துக்களை கேட்டுக் கொண்டு மௌனித்திருக்க எம்மால் முடியாது. யுத்த காலத்தில் நாம் கொண்டிருந்த மோசமான சகாப்தத்தை அவர் மறந்திருக்கக் கூடும் அத்தகையதோர் சகாப்தத்தை நாம் மீண்டும் ஒருபோதும் விரும்பவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புற்றுநோய் மருந்துகளின் விலைகள் மேலும் குறையும்

## அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

விலையுயர்ந்த புற்றுநோய் மருந்துகளின் குறைந்த பட்ச விலை 64 ஆயிரம் ரூபா வரை நிர்ணயிக்கப்படும் என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் இந்த மருந்து வகைகளின் விலை இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவாக இருந்தது எனவும் இந்த அரசாங்கம் ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ரூபா வரை குறைத்ததாக தெரிவித்தார்.


இரு புற்றுநோய் மருந்து நிறுவனங்கள் இலங்கையில் இயங்க அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)



இலங்கை அரசின் திட்டமிட்ட அடையாள இன அழிப்பின் ஒரு அங்கமாக யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதன் 37 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு 'எரிந்தது நூலகமா? இல்லை - தாயகம்' என்ற நூல் அறிமுகமும், "எரியும் நினைவுகள்" ஆவணப்படம் திரையிடலும் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றன. (படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடிப்புக்கள் ஏற்படுத்திய செவிவடு கேட்டற் பாதிப்பும் சமநிலை பாதிப்பும்



2008-2009 இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள், கடற்படை ஏவுகணைத் தாக்குதல்கள் சுமார் 4 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களிடையே பாரிய செவிவடுவினை ஏற்படுத்தி உள்ளன.

செவிவடுவானது ஒருவரின் கேட்டல் திறனையும் அவரது சமநிலை நிற்றலையும் வெகுவாகப் பாதிக்கின்றது.

குண்டுத்தாக்குதல்களுக்கு அண்மையில் நிற்போரில் 50% ஆனோருக்கு செவிப்பறை மென்சவ்வு பாதிக்கும் தன்மை ஏற்படும். மேலும் உட்செவியில் 2000 HZ தொடக்கம் 8000HZ வரையிலான அதிர்வுகளை உணரும் தன்மை அழிக்கப்படும். குண்டு வெடிப்புத் தாக்கங்களுக்கு முகம்கொடுபோரில் 35-54% ஆனோருக்கு இத்தகைய பாதிப்பு ஏற்படும் சாத்தியம் உள்ளது. குண்டுவெடிப்புக்களினால் ஏற்பட்ட செவிவடு பற்றிய விழிப்புணர்வு எமது சமூகத்திற்கு அவசியம். கடந்த காலத்தில் தமக்கு அண்மையில் குண்டுவெடிப்பு தாக்கங்களை அனுபவித்தவர்கள், தமது செவிப்புலனைப் பரிசோதிப்பதாலும் சமநிலைத்தன்மையில் பாதிப்பு ஏற்படாத நிலையை அதாவது தலைச்சுற்று, மயக்கம் போன்ற அறிகுறிகளை ஆராய்வதாலும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை அறிந்து கொள்ளலாம்.

மேலும் காதின் கேட்டற்திறனை சிறப்பு நிபுணத்துவ மருத்துவர் மூலம் பரிசோதித்து தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக குண்டு வெடிப்பு சம்பவங்களில் அருகில் இருப்போரில் 40-60% ஆனோருக்கு கேட்டற்புலன் குறைவடையும். 10-30% ஆனோருக்கு செவிப்பறை மென்சவ்வு சிதைவடையும். 15-25% ஆனோருக்கு தாங்கமுடியாத காதுவலி ஏற்படும். மயக்ககுணம் 10-20% ஆனோருக்கு ஏற்படும். தலைச்சுற்று 30-60% ஆனோருக்கு ஏற்படும்.

எனவே எமது சமூகத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழலில் பெருமளவான மக்கள் செவிப்புலன் பாதிப்புக்கு உட்பட்ட தன்மையை நாம் உணர வேண்டும். குறிப்பாக செவிப்புலன் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர்களுக்கு தமது மனைவி, பிள்ளைகளின் குரல்கள் பெரிய சத்தமாகவே கேட்கும். இது குடும்ப உறவுகளில் பாதிப்பையும், மதுபாவனை, துஷ்பிரயோகத்திற்கும் ஏதுவாக அமைகின்றது. மேலும் ஞானேந்திரியமான செவிப்புலனின் பாதிப்பு ஆத்மாவின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் தடையாக அமையும். இதனால் குரூர மனிதர்கள் பலர் உருவாக்கப்படுவர்.

எனவே கடந்த காலங்களில் குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சமூக உதவியினையும் மருத்துவ உதவிகளையும் நலன்பேணும் அமைப்புக்கள் முயல வேண்டும்.

டாக்டர்.
சி.யமுனானந்தா

# ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியது யார்?

## நாமல் கேள்வி



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ குறித்து வெளியான செய்தி தொடர்பில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்று தெளிவுபடுத்துமாறு நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவுக்கு 7.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவினால் அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றதாக நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் பின்னர் குறித்த செய்தியை வெளியிட ஒத்தாசையாக இருந்த இலங்கை ஊடகவியலாளர்களை மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தியுள்ளதாகவும் மீண்டுமொரு செய்தியை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை நேற்று முன்தினம் பிரசுரித்துள்ளது.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேரும் யார் என்பதை தெளிவுபடுத்துமாறு நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்கள் தரப்பில் யாரும் அவ்வாறு அச்சுறுத்தவில்லை என்றும் ஆனாலும் தான் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் குறித்த செய்தி தவறானது என்று விமர்சித்ததாகவும் நாமல் தெரிவித்தார்.

விமர்சனம் மற்றும் அச்சுறுத்தலுக்கு வித்தியாசம் தெரியாத நிலையில் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை நிர்வாகம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தவிரவும் இப்படி அநாமதேய செய்திகளை வெளியிடுவதன் மூலம் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் நம்பகத்தன்மை கேள்விக்குட்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவிததார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்




விநாயகராமன்

**எண் 2 (சந்திரன்)**
**(சமுதாயச் சிற்பிகள்)**

பொதுநலனில் அதிக அக்கறை கொண்டு உழைப்பார்கள். உயர்ந்த நோக்கமும் சிறந்த உள்ளமும் கொண்ட இவர்கள் எப்பேற்பட்ட சோதனையிலும் நேர்மையைக் கடைப்பிடிப்பார்கள். பேராசையைக் குறைத்துக் கொண்டால் மாபெரும் சாதனையாளர்கள் ஆவார்கள். இளமை முதலே தெய்வ நம்பிக்கையுடன் செயற்பட்டு மாபெரும் மேதையாவார்கள். படிப்பு, செல்வம், வசதி குறைந்த நபர்களுக்கு நம்பிக்கையுடன் செயற்பட்டு விரைவில் முன்னுக்கு வருவார்கள். தெய்வீக சக்திகள் அவ்வப்போது தோன்றி மறையும். பெரிய மனிதர்களை மதிப்பார்கள். சமுதாயத்துக்கு வேண்டிய நல்ல காரியத்தைச் செய்வார்கள். கற்பனை வளம், ஓவியம் வரையும் திறமையுண்டு. மற்றவர்களுக்கு இடையூறு செய்ய மனம் இல்லாதவர்கள்.

**20ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

மிதமிஞ்சின கற்பனை சக்தியும், அளவுக்கதிகமான மனோதிடமும் இயற்கையிலேயே வாய்க்கப் பெற்றவர்கள். தெய்வீக அனுக்கிரகம் நேரடியாகக் கிடைக்கும். சுலபத்தில் உலகம் இவர்களை வழிகாட்டியாக ஏற்று வழிபடும். வரலாறு படைப்பார்கள். இவர்கள் மனிதருள் மாணிக்கமாவார்கள். இவர்களின் சொல்லுக்குக் கட்டுப்படும் மக்கள் கூட்டமே இருக்கும். சுயநலமின்றி வாழ்ந்தால் தெய்வத் திருமகன் என்று பெயரெடுப்பார்கள். சுய நலத்தையும் பேராசையையும் குறைத்துக் கொண்டால், உலகம் இவர்களைத் தெய்வம் போல போற்றி வழிபடும். உலக மக்களின் நன்மைக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். ஆன்மீகத்தில் அரிய சாதனைகள் செய்வார்கள். கதை, கவிதை, கற்பனை, காவியம் புனைவதில் வல்லவர்கள். எந்த ஒரு காரியத்தையும் செவ்வனே செய்து முடிக்கும் திறமைசாலிகள். தெய்வ சக்தியை இலாபம் கருதிச் சிதறடிப்பார்கள். இவர்கள் எவ்வளவு சிக்கலான பிரச்சினைகளையும் சுலபமாகத் தீர்த்து வைக்கும் ஆற்றல் படைத்தவர்கள். கலைஞர்கள், [illegible] கவிஞர்கள், சினிமா நடிகர்கள், இசை மேதைகள், அழகுக் கலை நிபுணர்கள், ஆன்மீகச் செம்மல்கள், தீர்க்க தரிசிகள் இந்த எண்ணில் பிறந்தவர்கள். இராஜதந்திரம் அறிந்தவர்கள். இளகிய மனமிருக்கும். தீர்க்கதரிசனம் கிடைக்கும். எளியவர்களுக்கு உதவும் நல்ல குணமிருக்கும். சிறந்த உழைப்பாளிகள். தியாக உள்ளம் படைத்தவர்கள். தனிமையும், சுதந்திரமான மனப்போக்கும் உடையவர்கள். எக்காரியத்தையும் விரைவில் நேர்த்தியாகச் செய்து பாராட்டுக்களைப் பெறுவார்கள். உழைப்பினால் பல பதக்கங்கள், பதவிகள், பாராட்டுக்கள், பட்டங்கள் கிடைக்கும். மிக்க கண்ணியமான வாழ்க்கை வாழ்வார்கள். சுயநலம் மிகுந்தால் வீடு, நாடு, சமுதாயம் அனைத்திற்கும் கேடு விளைவிக்கும் காரியத்தில் இறங்கி விடுவார்கள். வன்மையுடன் நடந்து கொள்வார்கள். சமுதாயத்தை தவறாக வழி நடத்தும் துஷ்ட சக்தியை வேரோடு பிடுங்கி புதிய பாதை காட்டுவார்கள். பொன், பொருள், வாகன வசதிகள் சேரும். மனதில் பல புதிய கருத்துக்கள் உதயமாகிய வண்ணம் இருக்கும். நிறைய நல்ல நண்பர்களை உடையவர்கள். நல்ல புகழும், மங்காத வரவேற்பும் மக்களிடம் என்றென்றும் இருக்கும். வாழ்க்கையில் அனைத்து விதமான சுகசௌகரியங்களையும் அனுபவிப்பார்கள். தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வுடன் வாழ வைப்பார்கள்.

**29 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

தீவிரமான உழைப்பாளிகள், வீணான சிக்கல்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்கள். சமாதானத்தையும் அமைதியையும் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். மற்றவர்களை கஷ்டப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். பணபலம் மிக்கவர்கள், தேவையில்லாத, தனக்கு சம்பந்தமில்லாத பல பிரச்சினைகளில் தன்னைப் போட்டுக் குழப்பிக் கொண்டு தன்னை சார்ந்தவர்களையும் துன்பத்தில் ஆழ்த்தி விடுவார்கள். பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி இல்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும். எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள். வீண் கலகம் மூட்டுவார்கள். ஏன்? எதற்கு? என்ற காரணம் தெரியாமல் சண்டையிடுவார்கள். நண்பர்களை புறம் கூறித் திரிவார்கள்.

பிறருக்கு உதவும் மனப்பான்மை எளிதில் வராது. எல்லோரும் தன்னை மோசம் செய்வதாகப் புலம்புவார்கள். சந்தேகப் புத்தி வாய்ந்தவர்கள். மனதில் பயமிருக்கும். சுயகாரிய புலிகள். பொது நலவாதிகள் போல நடிப்பார்கள். எதிலும் தர்க்கமும் வாதமும் செய்வார்கள்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச,தனியார் நிறுவன ஊழியர்களுக்கான போட்டி

இலக்கிய இணைக்குழு தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் உழைக்கும் மக்கள் கலை விழா -2018 இற்கான பின் வரும் பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

1. சிறுகதை

2 .பாடல் இயற்றல் தலைப்பு-வாழ்வதற்காக தமது உழைப்பை சிந்துகின்ற மக்களின் வாழ்க்கை யதார்த்தத்துடன் சமூக அனுபவம். 3.கவிதை இயற்றல்.

4.குறுநாடகம் பிரதிகள் திறந்த பிரிவுப் போட்டி

5.ஓவியம்-தலைப்பு "தூரிகை முனையில் உழைக்கும் மக்கள் வெளிப்படுத்தல் ஓவியம் ( Express Arts) அளவு அங்குலம் 18×14- விருப்பமான வர்ணம்

கேலிச் சித்திரம் அளவு ஏ4 வர்ணம் கறுப்பு, வெள்ளை சுவரொட்டி சித்திரம் அளவு அங்குலம் 18×14 (காகிதம்) விருப்பமான நிறம்.

6.புகைப்படம் ஒரு நிற வர்ணம்

தலைப்பு-மனித செயற்பாடுகள், மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான பிணைப்பு மற்றும் நடவடிக்கைகள், மனித உழைப்புடன் பிணைந்த உற்பத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட தொடர்புடைய ஆக்கங்கள்.

7.படைப்பாற்றல் மிக்க விளம்பர சுவரொட்டி வடிவமைப்பு (Poster Disining) உழைக்கும் மக்களின் செயற்பாடுகள் பற்றியதும் உழைப்பின் பெறுமதியை வெளிப்படுத்துகின்ற படைப்புகள் அளவு ஏ3 - விருப்பமான நிறம்.

8.கையடக்கத் தொலைபேசி சினிமா போட்டி (Mo Film (HB Formet)

போட்டிக்கான விபரங்கள் தலைப்பு- திறந்த, படைப்பின் அதிகபட்ச காலம்- 7 நிமிடங்கள்.

பாடசாலை மற்றும் திறந்த துறை இரண்டிலும் நடைபெறும். சகல ஆக்கங்களுக்கும் ஆங்கில உப தலைப்பு அவசியமாகும்.

மேற்காணும் தலைப்புகளில் நடைபெறும் போட்டிகளுக்கான விதிமுறைகளாவன,

சிறுகதை, பாடல், இயற்றல், குறுநாடகப் பிரதிகளை அனுப்பும் போது ஏ4 தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி 3 பிரதிகளை கீழே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மற்றும் கையடக்க தொலைபேசி சினிமாப் போட்டியின் விதிமுறை நிபந்தனைகளாவன,

நீங்கள் முன்வைக்கின்ற ஆக்கமானது இதற்கு முன் எந்தவொரு விழாக்களிலும் பரிசு பெற்றதாக இருக்கக் கூடாது.

சினிமா ஒலிப்பதிவு 2 DVD உடன் சினிமா ஒலிப்பதிவின் உண்மையான இரண்டு புகைப்படங்களும் இயக்குநரின் புகைப்படமொன்றும் ஒலிப்பதிவு பற்றிய சுருக்கக் குறிப்புடன் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கமும் உள்ளடங்கிய விண்ணப்பப் படிவத்தை அனுப்புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31.07.2018 .


முகவரி:

தலைவர், இலக்கிய இணைக்குழு, தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம், 259/9 செத்சிரி மாவத்தை, கொஸ்வத்தை தலங்கம.

தொலைபேசி-011 207 3288, 071 812 6075

fax:0112-073288 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மாணிக்கக்கற்களுடன் சீனப் பெண் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை மாணிக்கக் கற்களை நாட்டிற்குள் கடத்தி வந்த சீனப் பெண் ஒருவரை நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தாய்லாந்து - பாங்கொக் நகரிலிருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் வந்த குறித்த பெண்ணை சோதனையிட்ட போது அவரது பயணப் பொதியில் மறைத்து வைத்திருந்த மாணிக்கக் கற்களை சுங்கப் பிரிவினர் மீட்டதோடு பெண்ணையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் 35 வயது சீனப் பிரஜையாவார். குறித்த பெண் இலங்கை பிரஜை ஒருவரை திருமணம் செய்து 12 வருடங்களாக நீர்கொழும்பு பகுதியில் வசித்து வருபவராவார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து பெரியளவிலான மாணிக்கக் கற்கள் 18 உம் சிறியளவிலான கற்கள் ஒரு தொகையும் பொதியிடப்பட்ட 13 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 48 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாவாகும்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் 40 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.(இ-7)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின் கீழ் மாதகல் பகுதியில் வசித்துவரும் 5 வயதிற்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட 15 குடும்பங்களுக்கு டெங்கு/ மலேரியா நோய்கள் வரமுன் காக்கும் திட்டமாக நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

# விண்ணப்பம் கோரல்

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் 2018 ஆம் ஆண்டு டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயது எல்லை -14.07. 2018 இல் 18 வயதுக்கு மேல் 30 வயதுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

தகுதி- க.பொ.த. உயர்தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலதிக தகைமை- தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் க.பொ.த.சாதாரண தரத்தில் 6 பாடம் சித்தியடைதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை சுயமாகவோ அல்லது சுன்னாகத்திலுள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியிலோ பெற்று அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2018 சித்த ஆயுர்வேத டிப்ளோமா கற்கைநெறி என்று குறிப்பிட்டுப் பதிவாளர் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மின்சார நிலைய வீதி சுன்னாகம் என்ற முகவரிக்கு 14.07.2018க்கு முன் அனுப்பி வைக்கவும். (இ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1453

### ராகவ்

முடிவெட்ட வந்தா பேசியல் பண்ணிக்கிறான்களான்னு கேட்கிறான்...
சரி எவ்வளவுன்னு கேட்டா 800 ஆம்...



நான் போட்டோஷொப்பே பண்ணிக்கிறேன்டா...

### ராகுலன்

ஒரு தடவை நம்ம கைக்கு கம்ப்யூட்டர் வந்துட்டா



முதல்ல பேஸ்புக் போவோம்
அப்புறம் நாசமா போவோம்

### தினேஷ்

இந்த விளையாட்டில கண்டிப்பா அப்பா தோற்றுவிடுவார்



ஆனால் அவர் பாசம் தோற்காது...!

### பிரிதா

வேலை பாக்கிறதில பாதி வாழ்க்கை போயிடுது



வேலை முடிஞ்சு வீட்டுக்கு வர்றதுல
மீதி வாழ்க்கை போயிடுது

### சிம்யோன்



உண்ணும் உணவை வீண் செய்யாமல் இருப்பதே
நாம் செய்யும் முதல் அன்னதானம்...!

### ரக்ஷிதா

ஏன்டா ஆட்டோவில இருந்து ஒரு Wheel ல கழட்டுன




அங்க Two wheeler மட்டும்தான்
பார்க் பண்ணனும்மாண்ணே!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் தலைதூக்குவதைத் தடுக்க எந்தவகையிலாவது நடவடிக்கை எடுப்போம்

## கெஹலிய ரம்புக்வெல உறுதி



(கொழும்பு)

மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதைத் தடுப்பதற்கு எந்தவகையிலாவது நடவடிக்கை எடுப்போம் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்விவகார மற்றும் வெளிவிவகார அமைச்சர்கள் முன்னிலையில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அரசியலமைப்பினை ஆறாவது சரத்தினை மீறும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் கோரியபோது அதற்கு சபாநாயகர் இடமளிக்கவில்லை. இதன் காரணமாகவே சபை நடுவில் இறங்கி கோஷம் எழுப்பினோம்.

நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஏன் குரல் எழுப்பவில்லை என மக்கள் எம்மிடம் கேட்பார்கள்.

எனவே எவ்வாறான முயற்சிகளை எடுத்தாவது இந்தச் சூழ்ச்சிகளை நாம் தடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோரிக்கை உதாசீனம்

# தவிசாளருக்கு எதிராக உறுப்பினர் முறைப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையிலுள்ள 18 உறுப்பினர்களில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 5பேர், ஈ.பி.டி.பி. 3பேர், சுதந்திரக் கட்சி 2 உறுப்பினர்கள் ஆகிய 10 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக்கு கட்டடம் அமைப்பது தொடர்பில் சபையில் கலந்துரையாடுவதற்கு விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யக் கோரி கடந்த 13.06. 2018 அன்று சாவகச்சேரி நகரசபை செயலாளர் ஊடாக தவிசாளர் சிவமங்கை இராமநாதனுக்கு கடிதம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை தவிசாளர் விசேட கூட்டம் நடத்துவதற்கு எந்த வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இதுதொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் சுதந்திரக்கட்சி உறுப்பினர் கந்தையா வேலாயுதபிள்ளை உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலமாக முறையிட்டுள்ளார். அவர் தனது முறைப்பாட்டுக் கடிதத்தில் கடந்த 06.06.2018 இல் நகரசபையின் நிர்வாக கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் பிரதேச செயலாளரினால் சமுர்த்தி வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட காணியில் கட்டடம் கட்டுவதற்கான அனுமதியினைத் தருமாறு சாவகச்சேரி நகரசபையைக் கோரி 1000 இற்கும் மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகளால் ஊர்வலமாகச் சென்று வழங்கப்பட்ட மகஜர் தொடர்பாக அன்று ஆராய்ந்து தீர்மானம் எடுக்கத் தவறியமை துரதிர்ஷ்டமே. எனினும் கடந்த 13.06.2018 அன்று மதிய வேளையில் சாவகச்சேரி நகரசபையின் செயலாளரூடாக தவிசாளருக்கு சமுர்த்திப் பயனாளிகள் வழங்கிய மகஜர் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்கான விசேட கூட்டத்தினைக் கூடுமாறு 10 நகரசபை உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட கோரிக்கை இன்று வரை நகரசபை தவிசாளரால் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளமையை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதில் மகஜர் கொடுத்த 1000 இற்கும் மேற்பட்ட சமுர்த்தி பயனாளிகளும் பயனாளிகளின் கோரிக்கைகளும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன. எனவே மேற்படி விடயத்திற்கான உரிய நடவடிக்கையை தங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம் என அவரது முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதன் பிரதிகளை வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார். (இ-30)

# விஜயகலாவை நாடு கடத்த வேண்டும்

## கூட்டு எதிரணி கொதிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்தை தூண்டும் வகையில் கருத்து தெரிவித்திருக்கும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி உடன் செயற்பட வேண்டும் என ஒன்றிணைந்த எதிரணியின் ஏற்பாட்டாளரும் கம்பஹாமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மினுவன்கொட- உடுகம்பொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்துள்ளார் எனவும், தமிழ் மக்களிடையே மீண்டும் தமிழீழம் என்ற கனவை விதைக்கிறார் எனவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறானவர்கள் நாடு கடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உடனடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். நான் நினைக்கிறேன் ஜனாதிபதி இது குறித்து இன்னும் அறியவில்லை என்று. ஏனென்றால் ஜனாதிபதி எல்லாவற்றையும் அறிவது பத்திரிகைகள் மூலமே என குறிப்பிட்ட பிரசன்ன ரணதுங்க, இதனையும் அவ்வாறு வாசித்தறிந்து ஈழம் வேண்டும் எனக் கோரும் விஜயகலாவை துறத்திடுங்கள் என தெிரவித்தார்.

கடந்த சில தினாங்களுக்கு முன்னர் வடக்கின் பல பாகங்களில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அரசாங்கம் அவற்றை மூடிமறைத்து விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கு வெள்ளையடித்தது. இந்த விடயம் தொடர்பில் இரகசிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் தெற்கு மக்கள் தினமும் ஏசுகின்றனர் எனக் கூறி ஜனாதிபதி வடக்குக்குச் சென்று விஜயகலாவுக்கு ஆறுதல் சொல்வதால் எந்த பயனும் இல்லை. நாம் குறை கூறுவது சாதாரண காரணங்களுக்காக.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் இவ்வாறானவர்கள் குறித்து, அதியுயர் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். விஜயகலாவின் வாயிலிருந்து வெளிவந்த கருத்தானது அரசாங்கம் வழங்கியுள்ள வாக்குறுதி என்பது தெளிவாக புலனாகிறது.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியில் இருந்து கொண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள இரண்டு அமைச்சர்கள் முன்னிலையில் அரச விழாவொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் தேவை எனக் கூறியிருப்பாராயின், அரசாங்கத்தின் புலிகளுக்கு ஆதரவானவர்கள் குறித்து வேறு சாட்சியம் தேவையில்லை. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டை பிரிக்க இடமளிக்க முடியாதென சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். அவ்வாறாயின் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் எவ்வாறு ஈழம் குறித்து பேசுவார் எனவும் பிரசன்ன ரணதுங்க கேள்வி எழுப்பினார். (இ-7)

# எரிவாயுவின் விலையை அதிகரித்து விநியோகித்தால் சட்ட நடவடிக்கை

## அமைச்சர் றிசாத் எச்சரிக்கை



(கொழும்பு)

சமையல் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக பழைய விலையில் அல்லது கூடிய விலையில் சமையல் எரிவாயுவை விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜூன் 29 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 5 கிலோ கிராம் சமயல் எரிவாயுவின் விலை 55 ரூபாவாலும் 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 25 ரூபாவாலும் 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 138 ரூபாவினாலும் குறைக்கப்பட்டது.

எனினும் இந்த புதிய விலைப் பட்டியலை மீறி பழைய விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தகர்களுக்கு எதிராக 011 775 5481-3 அல்லது 1977 என்ற நுகர்வோர் விவகார அதிகார சபையின் தொலைபேசி எண்ணுக்கு அழைப்பினை மேற்கொண்டு அறியத்தருமாறும் தெரிவித்துள்ளார். (இ-7)



யாழ்.மத்திய கல்லூரியில் சாரணர் ஆணையாளர் செ.தேவரஞ்சனால் அண்மையில் சாரணர் ஒருவருக்கு ஜனாதிபதி சின்னம் சூட்டப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன், மாவட்ட சாரண ஆணையாளர் இ.தவகோபல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிம்பாவே பாதுகாப்பு பல்கலைக்குழு பாதுகாப்புச் செயலாளருடன் சந்திப்பு

(கொழும்பு)

சிம்பாவே தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகக் குழுவினர் பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கபில வைத்தியரத்னவை சந்தித்தனர்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் சிம்பாவே தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக அதிதிகள் குழுவினர் எயர் வைஸ் மார்ஷல் மைக்கேல் டெட்ஸானி மோயோவின் தலைமையில் சந்தித்துள்ளனர். அவர்களின் சர்வதேச ஆய்வு சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொணடிருந்தபோது இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.



எயர் வைஸ் மார்ஷல் மைக்கேல்டெட்ஸானி மோயோ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் டி.ஏ.ஆர். ரணவக்கவும் கலந்துகொண்டார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன முரண்பாடுகளை களையும் நடவடிக்கை இலங்கையில் இன்னும் பூர்த்தியாகவில்லை

## அமெரிக்கத் தூதுவர் அலைனா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் நீதி மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளின் வேகம் மந்தகதியிலுள்ளது என இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் நியமிக்கப்பட்டுள்ள அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். அமெரிக்க செனட்டின் வெளிவிவகார குழுவின் முன்னிலையில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



ஊழல் ஒடுக்குமுறை மற்றும் பிணக்குகள் நிறைந்த கடந்த காலத்தை 2015 இல் இலங்கை வாக்காளர்கள் நிராகரித்து விட்டு சீர்திருத்தம், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலிற்கு ஆதரவு வழங்கிய தருணத்தின் பின்னர் இலங்கை நீண்ட தூரம் முன்னேற்றமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் நீதி மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளின் வேகம் மந்தகதியிலுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை களைவதற்கான நடவடிக்கைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை என்பதை கடந்த மார்ச்சில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெளிப்படுத்தியுள்ளன என அவர் தெரிவித்தார்.

நீதியை நடைமுறைப் படுத்துவது, பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை அமுல்படுத்துவது சமாதானமும் வளமும் நிறைந்த எதிர்காலத்தை உறுதிசெய்வது ஆகியவை தொடர்பில் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் இலங்கையின் முயற்சிகளிற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது இறைமை மற்றும் தேசிய நலன்களை பாதுகாக்கும் அதேவேளை பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு பாரிய பங்களிப்பை வழங்குவதற்குஏற்றவகையில்தன்னை வளர்த்துக்கொள்வதற்கும் அமெரிக்கா ஆதரவளிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி விசாரணை ஆணைக்குழுவின் மூன்றாம் இணைப்பு சமர்ப்பிக்கப்படவில்லை

## ஜனாதிபதி செயலாளர் ஒஸ்ரின் தகவல்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையுடன் மூன்றாம் இணைப்பு சமர்ப்பிக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு சென்ற தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், பிணைமுறி அறிக்கையின் தகவல்களை அண்மையில் கோரியிருந்தார்.

இதற்கமைய, பிணைமுறி அறிக்கையின் மூன்றாம் இணைப்பிற்கு என்ன நடந்தது என்று சுவடிகள் திணைக்களத்திடம் வினவியிருந்தார்.

இதற்கு அறிக்கையொன்றின் ஊடாக பதிலளித்த ஜனாதிபதி செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ,

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகம் தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையுடன் முதலாம், இரண்டாம், நான்காம் மற்றும் 5 ஆம் இணைப்புகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும், மூன்றாம் இணைப்பு சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, தமக்கு கிடைக்காத இணைப்பு குறித்து நாட்டுக்கு தெரிவிக்க ஏதுமில்லை என ஜனாதிபதி செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோமேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரிவினைவாத அறிவிப்பை வெளியிடுவதற்கு விஜயகலாவுக்கு எவ்வித உரிமையும் இல்லை

## விஜிதஹேரத் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொது மக்களின் பிரதிநிதியாக இருந்து கொண்டு பிரிவினைவாத அறிவிப்பொன்றை மேற்கொண்டுள்ள விஜயகலா மகேஸ்வரனுக்கு எந்தவித உரிமையும் இல்லையெனவும், இவரின் இந்த அறிவிப்புக்காக முழு நாட்டு மக்களிடமும் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் தெரிவித்தார்.

இவரின் இந்த அறிவிப்பை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது. இது பயங்கரமான ஒரு கருத்தாகும். மக்களின் பிரதிநிதியாக இருந்து கொண்டு இவ்வாறு தெரிவிப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை. நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிப்பதில்லையென நாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்தே பதவியை ஏற்கின்றோம்.

அவர் இந்த சத்தியப்பிரமாணத்தை உடைத்துள்ளார். இவர் குறித்து மிக விரைவில் விசாரணை நடத்த வேண்டும். பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவைக் கூட்டி உடன் நடவடிக்கை எடுங்கள். அவ்வாறு செய்யவில்லையெனில் நாட்டுக்கு தவறான முன்மாதிரியை வழங்கியவர்களாக மாறுவோம்.

இதுபோன்ற அறிவிப்புக்கள் மற்றும் சிலராலும் முன் வைக்கப்படுகின்றன. நாடு இன்று அராஜக நிலைக்குச் சென்றுள்ளது. இடத்துக்கிடம் மனித கொலைகள் இடம்பெறுகின்றன. வங்கிக் கொள்ளைகள் இடம்பெறுகின்றன.

புலிகளால் சிறுவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கவில்லை. இவர் இந்த அறிவிப்பை விடுத்திருந்தது ஜனாதிபதி நடமாடும்சேவையில்வைத்து என்பது மற்றொரு விடயமாகும். இன்னும் இரு அமைச்சர்கள் அங்கு இருந்தார்கள். இவரது உரை அரசாங்கத்தின் கருத்தாகக் கூட இருக்கலாம். இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## நடமாடும் சேவை இன்று

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேசசபையின் நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை புலோலி மேற்கு ஜே/410 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆதனவரி அறவீடு, துவிச்சக்கரவண்டி உரிமம், கட்டட விண்ணப்பப் படிவ விநியோகம், ஆதன பெயர் மாற்ற படிவ விநியோகம் ஆகியன இடம் பெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ. சா. அரியகுமார் அறிவித்துள்ளார். (இ-60)

## வெளிநாட்டுக்குச் செல்ல யோஷிதவுக்கு அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த, முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோஷித ராஜபக்ஷவுக்கு, இம்மாதம் இரண்டு வாரங்களுக்கு, வெளிநாடு செல்வதற்கு, ஹோமாகம மேல் நீதிமன்ற நீதிபதி அமலி திலகரத்ன நேற்று அனுமதியளித்துள்ளார்.

சீ.எஸ்.என் நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது, அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், நிதிக்குற்ற விசாரணை பிரிவினால், பணச் சலவை சட்டத்தின் கீழ், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கின் அடிப்படையிலேயே யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஒன்பது பேரை நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு, மேல் நீதிமன்றம் தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணவர்கள் இருவர் விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

மாணவர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள், பயணிகள் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், அந்த மாணவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே பலியான சம்பவமொன்று, தெய்யந்தரவில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

ஹக்மனவிலிருந்து தெய்யந்தரவை நோக்கி பயணித்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளே, இவ்வாறு பேருந்தில் மோதுண்டுள்ளது. சம்பவத்தில் தெலும் சந்தருவான் (வயது-16) மற்றும் இந்திரஜித் குமார (வயது 19) ஆகிய இருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

இவ்விருவரும் தெனகம எனுமிடத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

## மாடுகளை திருடியவர்களுக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சேருவில பிரதேசத்தில் இரண்டு பசு மாடுகளைத் திருடிய இருவருக்கு மூன்று மாதம் கட்டாய சிறைத்தண்டனை விதித்து மூதூர் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் நேற்று உத்தரவிட்டார்.

ஈச்சிலம்பற்று, கருக்காமுனை பகுதியைச் சேர்ந்த 36 மற்றும் 42 வயதுடைய இருவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் சேருவில பிரதேசத்தில் இரண்டு பசு மாடுகளைத் திருடி விற்பனை செய்த வழக்கு மூதூர் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையிலே இருவரையும் குற்றவாளிகளாக இனங்கண்டு மூன்று மாதம் கட்டாய சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார். (இ-7)

## கொழும்பு புறநகர்ப்பகுதியில் வெடிபொருட்கள், சீருடைகள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு - மெதிரிகிரிய பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து இரண்டு கண்ணிவெடிகள், 5 மெகசீன்கள் மற்றும் இராணுவச்சீருடைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் மேலும் வெடிபொருட்கள் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் இருக்கின்றனவா என்பதை கண்டறிய பொலிஸார் தொடர்ந்தும் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் மெதிரிகிரிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்


## பொறுமையும் பொறுப்பும்

விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன், ஆயிரம் முறைகளுக்கு மேல் தோல்வி கண்டு, பெரும் முயற்சிக்குப் பின் மின்சார பல்பை கண்டுபிடித்தார். ஆனால் வெற்றிக்குப் பின்னரும் அந்த 'பல்பு' எடிசன் உதவியாளரால் உடைத்து நொறுக்கப்பட்டது. அப்போது எடிசன் எப்படி நொந்து போயிருப்பார்...?

அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் எடிசன் பொறுமையுடன் நடந்து கொண்ட சுவாரஸ்ய சம்பவம்...

தனது நண்பர்களுக்கும் சக விஞ்ஞானிகளுக்கும் மின்சார பல்பை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக எடிசன், ஒரு சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார், அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

எடிசன், தனது உதவியாளரை அழைத்து மின்சார பல்பை மேல் தளத்திற்கு கொண்டு வரச் சொன்னார். பல்பை கொண்டு வரும்போது, அது கைதவறி விழுந்து உடைந்துவிட்டது. அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் எடிசன் சற்றும் திகைக்கவில்லை.



ஆயிரம் தோல்விகளைச் சந்தித்து வெற்றி கண்ட அவருக்கு மின்சார பல்பை மீண்டும் உருவாக்குவது எளிதாக இருந்தது. சிறிது முயற்சிசெய்து ஒரு பல்பை உடனடியாக உருவாக்கினார். அதனை மீண்டும் அந்த உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்துவரச் சொன்னார்.

பல்பை கீழே போட்டு உடைத்தவனிடமே மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீரகளே? என்று சிலர் எடிசனிடம் கேட்டு விட்டனர்.

அதற்கு எடிசன், 'பல்பு உடைந்ததும் என்னால் மீண்டும் செய்து கொள்ள முடிந்தது. ஆனால் அவரது மனதை காயப்படுத்திவிட்டால் அதை என்னால் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? மீண்டும் அவனிடமே பணியை கொடுத்தால் அவன் தனது பொறுப்பையும் எனது நம்பிக்கையும் உணர்ந்து கூடுதல் கவனத்துடன் பணிபுரிவான். அதனால் தான் அப்படி செய்தேன்' என்றார்.

எடிசனுக்கு வெற்றியை பெற்றுத்தந்த பொறுமை உணர்ச்சியின் எல்லையை அப்போதுதான் மற்றவர்கள்முழுமையாகஉணர்ந்து கொண்டனர்!

நம்மால் எப்போதும் உதவி செய்ய முடியாது ஆனால் எப்போதும் இதமாகப்பேச முடியும்!!!

## 2018.07 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1295-இங்கிலாந்துக்கு எதிராக ஸ்கொட்லாந்தும் பிரான்சும் கூட்டை உருவாக்கின.
- ❖1811-வெனிசுவேலா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ❖1884-ஜேர்மனி கமரூனை ஆக்கிரமித்தது.
- ❖1945-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்ஸின் விடுதலை அறிவிக்கப்பட்டது.
- ❖1950-கொரியப் போர்: அமெரிக்கப் படைகளுக்கும் வட கொரியாப் படைகளுக்கும் இடையில் முதலாவது மோதல் ஆரம்பமானது.
- ❖ 1954-பி.பி.சி. தன் முதல் தொலைக்காட்சிச் செய்தியை ஒளிபரப்பியது.
- ❖ 1954-ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது.
- ❖1962-பிரான்சிடமிருந்து அல்ஜீரியா விடுதலை அடைந்தது.
- ❖1971-ஐக்கிய அமெரிக்காவில் வாக்களிக்கும் வயது எல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.
- ❖1987-விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலித் தாக்குதல் மில்லரினால் யாழ்ப்பாணம், நெல்லியடி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்டது.
- ❖1992- இயக்கச்சியில் வை-8 விமானம் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- ❖1996-குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டி. டோலி என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறந்தது.
- ❖1998-செவ்வாய்க் கோளுக்கு தனது முதலாவது விண்கலத்தை ஜப்பான் ஏவியது.
- ❖2004-இந்தோனேசியாவில் முதலாவது அதிபர் தேர்தல் இடம்பெற்றது.
- ❖2009-ரொஜர் பெடரர் விம்பிள்டன் டென்னிசுத் தொடரில் ஆண்டி ரோடிக்கை வென்று 15 ஆவது பெருவெற்றித் தொடரைப் பெற்று சாதனை புரிந்தார்.

**பிறப்புகள்**

- ❖ 1750-அய்மே ஆர்கண்ட், சுவிட்சர்லாந்து இயற்பியலாளர், வேதியியலாளர் (இ. 1803)
- ❖1857-கிளாரா ஜெட்கின், செருமானிய மார்க்சியவாதி (இ. 1933)
- ❖1867-ஏ.ஈ.டவுகிளாசு, அமெரிக்க வானியலாளர் (இ. 1962)
- ❖1933-ஜான்வி. எவான்சு, ஆங்கிலேய-அமெரிக்க வானியலாளர்
- ❖1946-பாலகுமாரன், தமிழக எழுத்தாளர்
- ❖1949-சிவசங்கர் மேனன், இந்திய முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்
- ❖1954-ஜான் ரைட், நியூசிலாந்து துடுப்பாளர்

**இறப்புகள்**

- ❖1833-யோசெப் நிசிபோர் நியெப்சு, பிரெஞ்சுக் கண்டுபிடிப்பாளர் (பி. 1765)
- ❖1898-வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தமிழிசையாளர் (பி. 1839)
- ❖1965-க.பசுபதி, ஈழத்து முற்போக்கு இடதுசாரி இலக்கியவாதி, கவிஞர் (பி. 1925)
- ❖1987-வல்லிபுரம் வசந்தன், விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலி (பி. 1966)
- ❖ 1994-வைக்கம் முகமது பசீர், மலையாள எழுத்தாளர் (பி. 1908)
- ❖ 1997-அருணாசலம் தங்கத்துரை, ஈழத்து அரசியல்வாதி (பி. 1936)
- ❖ 2006-திருநல்லூர் கருணாகரன், இந்தியக் கவிஞர் (பி. 1924)
- ❖ 2015-நாம்பு ஓச்சிரோ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1921)

**சிறப்பு நாள்**

- ❖விடுதலை நாள் (வெனிசுவேலா, 1811)
- ❖விடுதலை நாள் (அல்ஜீரியா, 1962)
- ❖விடுதலை நாள் (கேப் வெர்டி, 1975)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 1110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 400 | 500 | 400 |
| தக்காளி | 250 | 300 | 200 | 260 | 240 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 200 | 120 | 200 | 200 | 170 |
| கரட் | 240 | 400 | 220 | 300 | 220 | 260 |
| பூசணி | 50 | 30 | 20 | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 100 | 80 | 100 | 120 | 70 |
| வாழைக்காய் | 80 | 100 | 35 | 80 | 80 | 80 |
| சின்ன, வெங்காயம் | 140 | 160 | 100 | 120 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 110 | 120 | 110 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 250 | 320 | 240 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 140 | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 80 | 60 | 55 | 80 | 160 | 120 |
| லீக்ஸ் | 300 | 300 | 190 | 200 | 240 | 270 |
| பீற்றூட் | 180 | 180 | 110 | 200 | 200 | 140 |
| கறிமிளகாய் | 250 | 400 | 120 | — | 400 | 300 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 440 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 300 | 300 | — | 250 | 320 | 250 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | — | 60 | 60 |
| கீரை – 1பிடி | 40 | 20 | 30 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 25-50 | 60 | 50-70 | 65 |
| இராசவள்ளி | 140 | 200 | 130 | 180 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 300 | 280 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 100 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 10 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 70 |
| ஈரப்பலா | 60 | 30 | 110 | 60 | 80 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி வரும் முன்னே கிலி அடித்துச் செத்தானாம்
– *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமைச்சர் விஜயகலா தமிழர் என்பதால்...

விடுதலைப் புலிகள் மீண்டும் வரவேண்டும் என இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறியதை தூக்கிப் பிடித்து அவரை ஓர் இனவாதி போல சிங்களப் பேரினவாதிகள் காட்டி நிற்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மீண்டும் வரவேண்டும் என அமைச்சர் விஜயகலா கூறியதை சிங்களத் தரப்புகள் பெரிதுபடுத்தி பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பங்கள் எழுந்ததும் இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிரடியாக அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை அமைச்சுப் பதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஒரு தமிழன் தேசிய கட்சியில் இருந்தாலும் அவன் கதைத்தால் தங்களுக்கு ஆதரவாகக் கதைக்க வேண்டும். இல்லையேல் கதைக்காமல் இருக்க வேண்டும்.

மாறாக தமிழ் மக்களின் சமகால நிலைப்பாட்டை எடுத்துக் கூறினால் அவர் பதவி துறக்க வேண்டும் என்பதுதான் சிங்களத் தரப்பின் முடிவு என்பது இப்போது வெளிப்படையாகிவிட்டது.

விடுதலைப் புலிகள் மீண்டும் வரவேண்டும் என அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறிய சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பார்ப்பதுதான் ஆட்சியாளர்களுக்கும் கூக்குரல் போடுவோருக்கும் அழகு.

இதைவிடுத்து எடுத்த எடுப்பில் அவரைப் பதவி விலகக் கேட்பது அவர் ஒரு தமிழர் என்பதால் அவரை ஓரங்கட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயன்றி வேறில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். கொலை, கொள்ளை, களவு, பாலியல் துஷ்பிரயோகம் எதுவும் கிடையாது.

அவ்வாறு யாரேனும் தப்பித்தவறி செய்தால் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் நிம்மதியாக உறங்கினர்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன மிக உச்சமாகப் பேணப்பட்டது என்பதை வெளிநாட்டுப் பிரமுகர்கள் மனப்பூர்வமாக ஏற்றுள்ளனர்.

ஏன்? விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட படைத் தளபதிகள் மற்றும் கப்பல் தளபதிகள் விடுதலைப் புலிகளின் ஒழுக்கத்தை – கட்டுப்பாட்டை – நிர்வாகத்தை வியந்து பேசியுள்ளனர்.

அப்படியானால் அவர்களுக்கும் அந்நேரம் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். எனினும் அதை இலங்கை ஆட்சியாளர்கள் செய்யவில்லை எனும்போது அதற்கு அவர்கள் தமிழர்கள் இல்லை என்பதே காரணம் என எடுத்துக் கொள்ளலாமா? என்பது நம் கேள்வி.

தவிர, விடுதலைப் புலிகள் மீண்டும் வரவேண்டும் என்ற அமைச்சர் விஜயகலாவின் உரை விடுதலைப் புலிகள் இராணுவத்துடன் சண்டை பிடிப்பதற்காகவோ அன்றி நாட்டைப் பிரிப்பதற்காகவோ அல்ல.

மாறாக வட்டுக்கோட்டையில் நடந்த கொடூரம், சுழிபுரத்தில் நடந்த மிலேச்சத்தனம், நாளாந்தம் நம் மண்ணில் நடக்கும் வாள்வெட்டு, அடாவடித்தனம் இவற்றின் காரணமாகவே மீண்டும் விடுதலைப் புலிகள் வரவேண்டும் என்ற கருத்தை அமைச்சர் விஜயகலா முன்வைத்தார்.

இவ்வாறு அமைச்சர் விஜயகலா கூறியதைக் கண்டு கூக்குரல் இடுவோர், வடபகுதியில் நடக்கும் பயங்கரங்களை ; போதைவஸ்து பாவனைகளைக் கண்டித்து கூக்குரல் இடாததும் வடக்கில் உள்ள பொலிஸார் என்ன செய்கிறார்கள் எனக் கேட்காததும் ஏன்?

ஆக, அமைச்சர் விஜயகலா ஒரு தமிழர். அவரையும் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்க வேண்டும். தமிழனுக்கு எந்தப் பதவியையும் கொடுக்கக்கூடாது என்ற மனவக்கிரமே எல்லாவற்றுக்கும் மூலகாரணமாகும்.

# வடக்கிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச ரீதியில் வேலைவாய்ப்பு

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் விதாதா வள நிலையங்கள் அமைத்து. அதனூடாக இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச ரீதியில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகமாக நேற்று யாழுக்கு வருகை தந்த விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் உட்பட பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்

யாழ்.மாவட்டத்தில் பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நோக்கத்துடன் யாழுக்கு வந்தேன். யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கான தொழில கற்கைகளை ஆரம்பிக்கும் நோக்கத்தில், இங்குள்ள விதாதா வள நிலையங்களில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புப் பெறக் கூடிய கற்கைநெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த பயிற்சி நிலையங்களில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில், மேலும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினைப் பெற விதாதா வள நிலையங்களில் தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

விதாதா வள நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியினை கட்டாயமாக படிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு ஆங்கில மொழியையும் தொழில்நுட்ப பாடத்தினையும் படிப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. ஆனால், வசதி படைத்த மாணவர்களுக்கு ஆங்கிலமொழி மற்றும் தொழில்நுட்ப பாடங்களை படிப்பதற்கான வசதிகள் கிடைக்கின்றன.

இவ்வாறான கற்கைகளைப் படிப்பவர்கள், தொழில வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும். தாதிய பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பம், ஆங்கில கற்கைகள் உள்ளிட்ட பல பாடநெறிகளை ஒரே விதாதா வள நிலையங்களில் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எல்லா பிரதேச செயலகங்களிலும் உள்ள விதாதா வள நிலையங்களில் ஒரே மாதிரியான வசதிகளை எதிர்பார்க்க முடியாது. சில விதாதா வள நிலையங்களில் ஆசிரியர் பற்றாக்குறைகள் நிலவும். அதற்கு ஏற்றவாறு ஒரு விதாதா வள நிலையத்தில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

விதாதா வள நிலையங்களில் கற்கும் மாணவர்களுக்கு சர்வதேசத்திற்கு ஒப்பான சான்றிதழ்களை வழங்க முடியுமென்பதுடன். அந்த சான்றிதழ்களைப் பயன்படுத்தி உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு எமது வாய்ப்பினை வழங்குவதே எமது நோக்கம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

### ஈழம் தொடர்பான திரைப்படத்துக்கு

## சர்வதேச விருது

(கொழும்பு)

"சினாங்கொள்" என்ற ஈழம தொடர்பான, திரைப்படத்திற்கு சிறந்த அறிமுகத் திரைப படத்துக்கான கொல்கத்தா சர்வதேச திரைப்பட விருது வழங்கப்பட்டுள்ளது.

பூ திரைப்படத்தில் இயக்குநர் சசியுடன் உதவி இயக்குநராக பணி புரிந்த ரஞ்சித் ஜோசேப் இந்த திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் வசனங்களையும் பாடல்களையும் ஈழத்தை சேர்ந்த கவிஞர் தீபச்செல்வன் எழுதியுள்ளார். படத்திற்கு தென்மேற்குப் பருவக்காற்று திரைப்படம் புகழ் என்.ஆர்.ரகுநந்தன இசை அமைத்துள்ளார்.

ஆண்டவன் கட்டளை படத்தில் விஜய் சேதுபதியுடன் இலங்கை கதாபாத்திரத்தில் நடித்த அரவிந்த் நாயகனாகவும் அவருக்கு ஜோடியாக புதுமுகநாயகி நர்வினி டெரி நடித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி ஒருவரின் வாழ்க்கை மற்றும் நிகழ்கால ஈழம் குறித்த இந்தப் படத்தில் இலங்கையை சேர்ந்த தமிழ் சிங்கள கலைஞர்களுடன் தமிழகம், இந்திய கலைஞர்களும் பணியாற்றியுள்ளனர். (ம-312)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் சிவகாமி அம்மன் கோவிலடி காரை நகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில மலையாபருத்திக்குளம் கிராமம், புளியங்குளம், காந்தி நகர், அரசடிக்குளம், பெரிய குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## சத்திய தரிசனம்



### அன்பு வழியே நல்வழி!

❖ பிரார்த்தனை என்பது உதட்டிலிருந்து வராமல், நெஞ்சிலிருந்து வரவேண்டும். அதுவும் தனக்காகச் செய்யாமல் பிறருக்காகச் செய்ய வேண்டும்.

❖ சாதனை படைப்பதற்காக வேகமாக போவது முக்கியமல்ல. சரியான பாதையில் போவது தான் முக்கியம். அப்போது தான சேரவேண்டிய இடத்துக்கு போய்ச் சேருவோம்.

❖ நன்மையும், தீமையும் உடலை மாறி மாறி வசப்படுத்தினாலும், இறுதியில் நல்லவை மட்டுமே நம்மை ஆள வேண்டும்.

❖ மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால் தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும், அதுபோல் அறியாமை அகலும் வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிடைக்கும்.

❖ அன்பு வழியில் பக்தி செலுத்தினால் குழப்பம் அனைத்தும் மறைந்துவிடும்.

❖ நல்ல விடயங்கள் விலைமதிப்பற்றவை. அது எண்ணிக்கையில் குறைவாகத் தான் இருக்கும். அவற்றை வாங்குவோருக்குத் தான் தகுதி வேண்டும்.

## புலோலி வில்லிபாதியானுக்கு இன்று தீர்த்தத் திருவிழா

புலோலி அருள்மிகு வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ம)

## அமைச்சர் சரத் அமுனுகம கிளிநொச்சி விஜயம்

அமைச்சர் சரத் அமுனுகம நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் ரெக்கிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு இடம்பெறும் கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

ஜேர்மன் நாட்டின் உதவியுடன் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்துள்ள மாணவர்களின் தொழில்துறைசார் பயிற்சிகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பது தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார். (ம-312)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சகல இந்துக்களுக்கும் இகம்பர-ஷேமம் தரும் சுலபமான வழிகள் எவை?**

அவரவர் சம்பிரதாயப்படி பளபளவென்று நெற்றியில் விபூதி, சந்தனம் முதலியவைகளை எப்பொழுதும் தரித்திருத்தல். இரவில் இது மிகமிக முக்கியம்.

தினமும் தூயமனத்துடன் சில நிமிடங்களாவது பகவான் நாமம்,ஜபம் செய்தல், அடிக்கடி ஸர்வே ஜநாஸ் சுகினோ பவந்து என்று உள்ளம் உருகி பிரார்த்தித்தல்

இயன்றவரை பிறருக்கு உதவுதல்

உபநயனம், விவாகம், பூஜைகள் போன்றவைகளில் மந்திரங்களைச் சரியாக உச்சரித்தல்.

த்ரிமஸ்தர்கள் காலை சந்தியாவந்தனம், மாத்தியான்னிகம், மாலை சந்தியாவந்தனம் இவைகளைத் தவறாமல் (சுருக்கமானாலும் சரி) செய்தல்.

வைதீக காரியங்களைச் செய்யும் போதும் கோயில்களுக்குப் போகும்போதும் பெரியோர்களைச் சேவிக்கும் பொழுதும் கல்யாணமானவர்கள் கச்சத்துடன் வேட்டி தரித்தல்.

சாஸ்திரி, பிருகஸ்பதிகளையும் தேவ வித்துக்களையும் தக்கபடி கௌரவித்தல். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு மாகாண பிறிமியர் லீக் மன்னார் எப்.சி-கிளியூர் கிங்ஸ் அணிகள் வெற்றி





வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 23 ஆவது போட்டியில் மன்னார் எப்.சி அணியை எதிர்த்து மன்னார் அவஞ்சேர்ஸ் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் மன்னார் எப்.சி அணியின், அடிக்கிக் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 24 ஆவது நிமிடத்தில் மன்னார் அணியின், றமேஸ் கோல் ஒன்றை அடித்தார். முதற்பாதியாட்டம் முடிவில், மன்னார் எப்.சி அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தின், 68 ஆவது நிமிடத்தில் மன்னார் அணியின் இஸாதீன் கோல் ஒன்றை அடித்தார். முடிவில் மன்னார் எப்.சி அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த 1 ஆம் திகதி வடமராட்சி கழுகுகள் மைதானத்தில் நடைபெற்ற 24 ஆவது போட்டியில் நொர்தேன் எலைட் அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது. போட்டியின் 14 ஆவது நிமிடத்தில் கிளியூர் கிங்ஸ் அணியின் கே.தேனுஸன் முதலாவது கோலை அடித்தார். 24 ஆவது நிமிடத்தில் கிளியூர் கிங்ஸ் வீரர் மைக்கல் கோல் ஒன்றை அடித்தார். முதற்பாதியாட்டம் நிறைவுறுகையில், கிளியூர் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியாட்டம் தொடர்கையில், 53 ஆவது நிமிடத்தில் கிளியூர் அணியின் மைக்கல் மேலும் ஒரு கோலை அடித்தார். அதுவரையில் மந்தகதியில் ஆடிய நொதேர்ன் எலைட் அணி, 56 ஆவது நிமிடத்தில் ஐ.தனுஸனின் உதையின் மூலம் கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டது. எனினும் விட்டுக்கொடுக்காது ஆடிய கிளியூர் கிங்ஸ் அணி, 73 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை அடித்து தங்கள் வெற்றியை உறுதி செய்தது. அந்தக் கோலை கே.தேனுஸன் அடித்தார். முடிவில் கிளியூர் கிங்ஸ் அணி, 04:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# தேசிய மட்ட சைக்கிளோட்டம் வடமாகாண வீரர்கள் முன்னேற்றம்



தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சைக்கிளோட்டப் போட்டியில் வடமாகாண வீராங்கனையும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

மேற்படி சைக்கிளோட்ட போட்டி திருகோணமலையில் நடைபெற்றது. இந்தச் சைக்கிளோட்டப் போட்டியில் 4 ஆம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விதுசனா நிர்மலேஸ்வரன் பெற்றார். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த இந்திரசித்தன் தமிழரசி 5 ஆவது இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த நிதர்சனா நிர்மலேஸ்வரன் 6 ஆவது இடத்தையும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த சந்திரகுமார் சர்மிளி 10 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டார். (க-26)




# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள அணிகளுக்கிடையில் Jaffna cricket league எனும் மாபெரும் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்து அனுப்பவும்.

விண்ணப்பங்களைப் பெறுவதற்கு 077 763 20 48, 075 555 5766 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (க)





கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டியில் தீவக கல்வி வலய கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலயம் மற்றும் புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகள் தேசிய மட்டத்தில் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டது. (க)

# வயம்ப பல்கலையை வீழ்த்தி அரையிறுதிக்குள் யாழ்.பல்கலை



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்நுழைந்தது.

50 ஓவர்களைக் கொண்ட மேற்படி சுற்றுப்போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தச் சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டியொன்று பெரதெனியா பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வயம்ப பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 48.1 ஓவர்களில் 139 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் நிதர்சன் 41, துவாரகசீலன் 19, தாரக 19, தனுஸன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் வயம்ப அணி சார்பாக, ஏ.டில்சான் [illegible] விக்கெட்டுகளையும், நுவான், பெர்னாண்டோ, நுவான், கவிந்த, மதுசானக்க தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய வயம்ப பல்கலைக்கழக அணி, 43.5 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்த போது, மழை குறுக்கிட்டு ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து, போட்டியைத் தொடர்ந்து நடத்த முடியாமையால் பரபோலா முறைப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் சமுத் 22, லயன் 22, கவிந்த 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, லோகதீஸ்வரன் 4 விக்கெட்டுகளையும் துவாரகசீலன், சானக்க தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து நடைபெறும் அரையிறுதியில் கொழும்பு பல்கலைக்கழக அணியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (க-26)

# வேம்படி மகளிர் கல்லூரிக்கு பளுதூக்கலில் 2 பதக்கங்கள்





தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப்பிரிவு பளுதூக்கல் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணிக்கு, ஒரு தங்கப் பதக்கமும் ஒரு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

17 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் திருகோணமலையில் நடைபெற்றது. இப்போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான பளுதூக்கலில், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த நிலோஜினி பிரதாபன் முதலிடத்தைப் பெற்றார்.

அதே பாடசாலையைச் சேர்ந்த கேதாரணி ராஜேஸ்வரன் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டார்.

நிலோஜினி பிரதாபன், அண்மையில் நடைபெற்ற 44 ஆவது தேசிய திறந்த விளையாட்டு விழாவில், வெண்கலப் பதக்கத்தைப் பெற்றிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வர் விக்னேஸ்...

மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை நிறுவுவது தொடர்பாக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது தொடர்பாக மாகாண சபைகளுடன் பேச வேண்டும். தற்போது கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளது. இது குறித்து வடமாகாண முதலமைச்சருடன் பேசுவதற்கு தயாராக உள்ளேன். இது தொடர்பாக சட்டம் நிறைவேற்றுவதற்கு மாகாண சபையின் அங்கீகாரம் அவசியமாகும்.

அத்துடன் வடக்கு வீடமைப்பு தொடர்பாக வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மீண்டும் பேச்சவார்த்தை நடத்துவதற்கு தயாராக உள்ளேன் என்றார்.. (ம)

## புலிகளின் காலத்தில்...

விஜயகலா மகேஸ்வரன் கூறியது பற்றி தெற்கில் பெரும் களேபரம் ஏற்பட்டுள்ளது தொடர்பாக கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் தற்காலப் பாதுகாப்பற்ற நிலையையும் முன்னைய பாதுகாப்பான நிலையையும் பற்றி விமர்சிக்க எவருக்கும் உரித்துண்டு:

இன்றைய பாதுகாப்பற்ற நிலை மாறி பாதுகாப்பான சூழல் ஏற்பட வேண்டும் என்று அவர் கூறியதில் என்ன பிழை என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு எமது மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மை. போர்க்காலத்தில் ஒரு பெண் தனிமையில் நகை நட்டு அணிந்து கொண்டு சூரிய அஸ்தமனத்தின் பின்னர் வீடு நோக்கி நடந்து சென்றால் அவருக்கு எந்தத் தொந்தரவோ பாதிப்போ ஏற்படாதிருந்தது என்பது உலகறிந்த உண்மை.

இன்று அப்படியா? வாள்வெட்டு, வன்புணர்ச்சி, வன்செயல்கள், போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்து வருகின்றன. இலஞ்ச ஊழல்கள் மலிந்து காணப்படுகின்றன. அதனால்த்தான் நான் இராணுவத்தைத் திரும்ப அழையுங்கள் பொலிஸ் அதிகாரங்களை எமக்குத் தாருங்கள். சகல வன்முறைகளையும் நிறுத்திக் காட்டுகின்றோம் என்று கூறியுள்ளேன்.

நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் தெற்கில் உள்ளவர்கள் தமது உள்ளார்ந்த வெறுப்புக்களைப் பிரதிபலிப்பது வருத்தத்திற்கு உரியது. இவ்வாறான தெற்கத்தையவர்களின் நடவடிக்கைகள் விஜயகலாவிற்கு எதிரானது அல்ல. தமிழர் மீதான சந்தேகம், வெறுப்பு, பயம் யாவற்றையும் பிரதிபலிக்கின்றது.

எமது பேச்சுக்களை விமர்சிக்காமல் எங்களுடன் ஒற்றுமையாகப் பேச முன்வாருங்கள். சமஷ்டி அரசியல் அமைப்பொன்றை நிறுவ முன்வாருங்கள் என்று தெற்கத்தைய அரசியல்வாதிகளிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் நாங்கள் எங்கள உரித்துக்கள் பற்றியோ பாதுகாப்பு பற்றியோ பேசும் போது எம்மைப் பயங்கரவாதிகள என்றும் தீவிரவாதிகள் என்றும் அழைப்பதை நிறுத்துமாறு கோருகின்றேன்.

பிரபாகரன் காலத்தில் எம் மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்ற உண்மையைக் கூறுவதால் நாங்கள் எவரும் பயங்கரவாதிகள் ஆகிவிட மாட்டோம். அந்த நாள் இன்று வந்திடாதோ என்று விஜயகலா கூறுவதால் அவர் தீவிரவாதி ஆகிவிட முடியாது..

புலிகள் காலத்தில் எம் மக்கள் (யுத்தத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை விட) பொதுவாகப் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பது உலகறிந்த உண்மை. ஆகவே விஜயகலா தனது கடமைகளைத் தொடர்ந்து பணியாற்ற அவரின் கட்சி இடமளிக்க வேண்டும். அவர் தேசியக் கட்சியில் இடம்பெறுவதால் தமிழச்சி என்ற அந்தஸ்தை இழந்தவராகக் கணிக்கக் கூடாது. விஜயகலாவின் சுதந்திரமும் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும்எனமேலும தெரிவித்தார். (ம-9)


21ம் ஆண்டு நினைவு...



அருணாசலம் தங்கத்துரை

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

அரசியலில் எனக்கு ஆசானாய் நல்வழி காட்டிய தங்களை ஒரு போதும் மறவேன்...!

தங்க. முகுந்தன்
முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர். (TULF)

மூளாய்
077 727 9238

(சி-3143)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலைமாணி (B.A)



பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE)

திருமதி சுஜிதா ஜெகன்

எமது வித்தியாலயத்தின் ஆசிரியரான திருமதி சுஜிதா ஜெகன் அவர்கள் 2016ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டத்தைப் பெற்றுக் கொண்டமைக்காகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2018.06.13 அன்று கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தைப் பெற்றுக் கொண்டமைக்காகவும் எமது பாடசாலை நலன்புரிச் சங்கம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

–ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்


## வவுனியா இளைஞன்...

வவுனியாவைச் சேர்ந்த கனகேஸ்வரன் கணேஸ்வரன் என்ற 28 வயதுடைய இயந்திரவியல் பொறியியலாளரான இளைஞனே மேற்படி கின்னஸ் சாதனையை புரிந்துள்ளார்.

அந்தவகையில் 2.914 மீற்றர் நீளமும், 0.074 மீற்றர் அகலமும், 0.050 மீற்றர் உயரமும் கொண்ட நீள் மின் இணைப்பு பொருத்தியை தயாரித்து கின்னஸ் சாதனையாளர் என்ற பட்டத்தை தனதாக்கி கொண்டுள்ளார்.

க.கணேஸ்வரன் 28-02-2018 அன்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்லூரியின் அதிபர் மற்றும் மாணவர்கள், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் கின்னஸ் சாதனை முயற்சியை பதிவு செய்திருந்தார் என்பதுடன் நில அளவை திணைக்களத்தை சேர்ந்த அரச நில அளவையாளர் பி.நிமலன் மற்றும் மின் பொறியியலாளர் கெ.ராஜ்குமார் ஆகியோரினால் மேற்பார்வை செய்யப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு கின்னஸ் சாதனைக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் கின்னஸ் சாதனை அமைப்பினால் உத்தியோகபூர்வமாக க.கணேஸ்வரனின் உலகசாதனை அறிவிக்கப்பட்டு அதற்குரிய சான்றிதழும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தொழில்நுட்ப துறையில் தனிநபர் ஒருவர் செய்து கொண்ட முதலாவது சாதனையாகவும், வவுனியாவில் இருந்து பதிவு செய்யப்பட்ட முதலாவது கின்னஸ் சாதனையாகவும் இது பதிவாகியுள்ளது. (ம-250)

## கருணாவிற்கு பிரதி...

வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் பிரபாகரனுக்கு பணம் வழங்கி தேர்தலில் வென்றவர்கள், அதுமட்டுமன்றி அன்று புலிகளை வென்ற இராணுவத்தினர் மற்றும் இராணுவ தளபதியை சிறையில் அடைத்தார்கள்.

மேலும், 600 பொலிஸாரை கொன்ற கருணாவுக்கு கட்சியில் உபதலைவர் பதவியை வழங்கியுள்ளார்கள். இவற்றை எல்லாம் செய்து விட்டு எப்படி இவர்கள், வடக்கில் விஜயகலா பேசியதை விமர்சிக்க முடியும் என பிரதமர் இதன் போது கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன் இவர்கள் நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பமிடுகின்றனர். இவர்களுக்கு எதிராக சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சபை நாகரிகத்தை முற்றிலும் சிதைத்து விடுவார்கள் என பிரதமர் மேலும் கூறியுள்ளார். (ம)

## எமக்கு புனர்வாழ்வு...

விஜயகலா, சிவாஜிலிங்கத்திற்கு விசுவமடு முகாமில் புனர்வாழ்வளியுங்கள் என்று பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா கூறியுள்ளார். இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன என கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நான் சிங்களத் திரைப்படத்துடன் சம்பந்தப்பட்ட பலருடன் எனது இளமைக்காலத்தில் பழகியவன். ரஞ்சனை எனக்கு பழக்கமில்லை. ஆனால் அவர் ஒரு உணர்ச்சி மிகுந்த ஒருவர் என்று எனக்குத் தெரியும். நாம் கூறுவனவற்றையும் செய்வதையும் பத்திரிகை வாயிலாக கண்டு உணர்ச்சி வசப்பட்டு விமர்சிக்கின்றார்.

உண்மையை உணர்ந்த பின்னரே அவரின் வார்த்தைகள் வெளிவர வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். எங்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டுமா என்று முடிவெடுக்க ரஞ்சன் ராமநாயக்கவை வடக்கிற்கு கௌரவத்துடனும் அன்புடனும் அழைக்கின்றேன்.

ரத்தினப்பிரியபந்து இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்களின் அன்பைப் பெற்றுக் கொண்டார். எங்கள் நால்வரிடையில் விஜயகலாவும், சிவாஜிலிங்கமும் நானுமே இல்லாதவர்கள். எமது மக்களுக்குப் பாதுகாப்பில்லை எமக்கு அதிகாரங்கள் இல்லை எமது கருத்துக்களுக்கு தெற்கில் இடமில்லை, எமக்கு மதிப்பில்லை புறக்கணிக்கப்படுகின்றோம், ஆக்கிரமிக்கப்படுகின்றோம். ஆகவே இரத்தினப்பிரியபந்து போல் எமக்கு வேண்டுவனவற்றை உடனே வழங்க ரஞ்சன் ராமநாயக்க முன்வரவேண்டும்.

எம்மிடம் இல்லாதவற்றை அவரின் அரசாங்கத்தின் ஊடாக எங்களுக்கு வழங்கினால் நாமும் அவர் மேல் அன்பும் மரியாதையும் காட்டுவோம். வடமாகாணம் வந்து நிலைமையைப் பார்த்துச் செல்ல பிரதி அமைச்சரை அன்புடன் அழைக்கின்றேன். இங்கு வந்து இராணுவத்தினரிடமோ பொலிஸாரிடமோ தனது கட்சிக்காரரிடமோ உண்மையைக் கேட்பதில் பயன் இல்லை. பொதுமக்களிடம் கேட்கட்டும். அவர்கள் சொல்வார்கள் யாருக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (ம-9)

## விஜயகலாவுக்கு...

சனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கும் பணிகள் நடந்து வருவதாக சபாநாயகர் கருஜயசூரிய நேற்று புதன்கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட கூச்சல், குழப்பம் தொடர்பில், சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கடந்த திங்களன்று (ஜூலை 02) யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வொன்றில் தெரிவித்த கருத்து குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் சபாநாயகர் விவரித்தார்.

இன்றைய சூழலில் தமிழீழ விடுதலை புலிகளை உருவாக்கவேண்டும் என்பதே எங்களுடைய முக்கிய நோக்கம் என இராஜாங்க அமைச்சர் சர்ச்சையான கருத்தை தெரிவித்திருந்தார்.

இந்த சர்ச்சையான கருத்து நேற்று முன்தினம் இலங்கை நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. அமைச்சர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட வேண்டும் என கூட்டு எதிரணியினர் கோஷம் எழுப்பினர். சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. இதனால் நாடாளுமன்ற அமர்வுகளுக்கு தடை ஏற்பட்டது. சபை நடவடிக்கைகளை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

நேற்று சபை அமர்வுகள் ஆரம்பித்த போது, நேற்றுமுன்தின சபை அமர்வில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்ட விதம் குறித்து சபாநாயகர் கருத்து தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த சபாநாயகர் கரு ஜயசூரிய, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து குறித்து அறியக்கிடைத்தவுடன் இதன் பாரதூரத்தை கருத்திற்கொண்டு, இதனைப் பரிசீலித்து, விசாரிக்க தேவையான நடவடிக்கையை அன்றைய தினமே எடுத்திருந்தேன். குறித்த உரையின் பதிவை எடுத்து, அதனைப் பரிசீலித்து, சபாநாயகர் என்ற வகையில் அரசியல் யாப்பு ரீதியாக என்னால் எடுக்க முடிந்த அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும், அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் தலைமைக்கு அறிவித்து, சட்ட மா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

நாடாளுமன்றம் செயற்பாட்டு ரீதியாக உலகின் முன்னுதாரணமான நாடாளுமன்றம் என்று சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், ஒரு சிலரின் மோசமான செயல்களினால் முழு நாடாளுமன்றத்தின் கௌரவத்திற்கும், நற்பெயருக்கும் பலத்த களங்கம் ஏற்படுகிறது. இதனை மிக வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், மிகவும் மோசமாக நடந்து கொண்ட விதம் நாடாளுமன்றத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்தும் நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ளேன். அரசியல் யாப்பு ரீதியாக சபாநாயகர் என்ற ரீதியில் என்னால் முடிந்த நடவடிக்கையை எடுத்துள்ளேன் என்று சபாநாயகர் தெரிவித்திருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உத்தியோகத்தர்களை...

ஜனாதிபதியின் மக்கள் சேவை 8ஆவது தேசிய நிகழ்சி திட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்ட பத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்வில் பெரு மளவான அரச உத்தி யோகத்தர்கள் கலந்து கொண்டி ருந்தனர்.

இதன்போதுவடக்கு மாகாண முதலமைச் சர் நீதியரசர் சி.வி. விக் னேஸ் வரன் உரையாற்றும்போதும் இராஜாங்க அமைச் சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் தமிழீழ விடுதலை புலிகளின் கை ஓங்க வேண்டும் என்று உரையாற்றும்போதும் அரச உத்தியோகத் தர்கள் பெரும் கூச்ச லிட்டு ஆரவாரித்த னர்.

இந்த நிலையில் உத்தியோகத் தர்கள் நடந் துகொண் ட விதம் தொடர்பில் விசாரணை நடத்த அறிக்கை சமர்ப்பிக்கு மாறு யாழ்.மாவட் டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களுக் கும் கடிதம் ஒன்று மாவட்டச் செயலர் என்.வேதநாயகனால் அனுப்பிவைக்கப்பட் டுள்ளது.

அந்த கடிதத்தில், உள் நாட்டலுவல் கள் அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்வில் தாங்கள் பிரதேச செய லக உத்தி யோகத் தர்கள் மற்றும் கிராம அலுவலகர்கள் அநா கரிகமாக நடந்து கொண்டமை அவ தானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயம் தொடர் பாக உடனடியாக விசா ரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக் கும்படி அறிவுறுத் தப்பட்டுள்ளது.

விவசாய விஞ்ஞானம் -(08)
A/L -18 Batch
முன்னோடிப் பரீட்சையும் வழிகாட்டல் செயலமர்வும்
Part -I -07/07, -II -08/07 பி.ப 1.00 மணி
செயலமர்வு -14/07, -15/07 பி.ப 1-4
ஆசிரியர் DMI -Jaffna
075 423 7652

கணக்கீடு
பிரத்தியேக வகுப்புக்கள்
இடம்:- பிரம்படி ஒழுங்கை கொக்குவில்
ஆசிரியர் S.தவா
B.Com (Hons) (Acc.Spl) (PGDE)
ஆரம்பம்
A/L 2019 சனி 3 P.M
A/L 2020 சனி 4 P.M
தொடர்புகளுக்கு:- 077 239 5858

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

ரூ.75,000 - ரூ.215,000
சம்பளத்துடன் டுபாய் வேலைவாய்ப்புக்கள்
வீட்டு மின் உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்கள் விற்பனை காட்சியறையில்
முகாமையாளர்
விற்பனை உத்தியோகத்தர்கள்
பிரதிநிதிகள்
விபரங்களுக்கு 0777 324 004
ஜூலை மாதம் பயண ஏற்பாடு
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
077 00 38 215
077 55 46 956
021 221 9 221

FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1, A2, B1, B2.
V.ஜெகன் (Trained, in France-2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 14.07.2018 சனி 1.00 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
ஆரம்பம் : 16.07.2018 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

வேலைவாய்ப்பு
நீங்கள் தொழில் தேடுபவரா?
உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து இயங்கி வரும் எமது சர்வதேச கம்பனிக்கு O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் தேவை.
• யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தினர் விரும்பத்தக்கது.
• வயதெல்லை 18-30
• தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்பு:- 076 678 1042, 077 408 3273

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

விஜயகலா மகேஸ் வரனின் கருத்து தென் னிலங் கையில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலை யில், அன்றைய தினம் நிகழ்வில் கலந்து கொண்ட அரச ஊழியர்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ம-9)

# இருவேறு...

விட்டுச் சென்றனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிளிலில் முகத்தை துணியால் கட்டிவந்த இருவரே இந்த குற்றச் செயலைச் செய்துவிட்டு தப்பித்தனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் ஹரிதாஸ் சத்தியதாஸ் என்ற குடும்பத்தலைவரே காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருடனான தனிப்பட்ட பகை காரணமாகவே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்தது என்று பொலிஸார் தெரி வித்தனர்.

மேலும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் பகுதி யில் உள்ள வீடொன்றுக்கு நேற்று முன்தினம், முகத்தை மூடிக்கட்டி வந்த 6 பேர்கொண்ட கும்பல் ஒன்று புகுந்து 15 வயது மாணவனைத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள் ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிவராசா சாருஜன் (வயது 15) என்ற மாணவன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெறுகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)

# யாழ்.பொலி...

வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆவா குழுவுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை கைது செய்யும் நடவடிக்கைக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள் ளது.

கடந்த சில நாட்களாக குடாநாட் டின் பல இடங்களிலும் வாள்வெட் டுச் சம்பவங்கள், பாலியல் துஷ்பிர யோகம், கொலை போன்ற வன் முறைகள் இடம்பெற்று வருகின் றமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து ஆவா குழு வின் அட்டகாசங்களைக் கட்டுப் படுத்தும் வகையில் பொலிஸாரால் இந்நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. (ம)

# விஜயகலாவுக்கு எதிரான நடவடிக்கை...

தொடர்ந்து எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபடவேண்டும் என பிரசாரம் செய்து வருகின்ற ஆட்சியாளர்களும் அரசியல் கட்சி களும் பெண் அரசியல்வாதிகளின் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை நசுக்கியே வருகின்றார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாக இராஜாங்க அமைச் சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் உரை தொடர்பில் ஏனைய மக்கள் பிர திநிதிகளினதும், அரசியல்கட்சிகளின தும், கடும்போக்கு அமைப்புக்களினதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இனப்படுகொலையை அரங்கேற்றி போர் வெற்றிப் பெருமிதத்துடன் தமிழ் மக்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிய ராஜபக்ஷவினருக்கு எதிராக தமிழ் மக்கள் தமது ஆணையை பயன்படுத்தினார் கள். அந்த ஆணையைப் பெற்ற அரசாங் கமும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது.

தற்போது மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையில் நல்லாட்சியை உருவாக்கப் போவதாக கூறி ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த இரு பிரதான கட்சித்தலைவர்களாலும் எதனையும் செய்ய முடியாதுள்ளது. வாக் குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்க விட்டு தமது கட்சிகளை எவ்வாறு வளர்த் துக்கொள்ள முடியும். அடுத்த தேர்தலை எவ்வாறு எதிர்கொண்டு அதிகாரத் தினை கைப்பற்ற முடியும் என்ற நிலைப் பாட்டிலேயே செயற்பாடுகளை முன்னெ டுத்து வருகின்றார்கள்.

அவ்வாறான நிலையில் வடக்கில் யுத்தப்பாதிப்பு ஒரு புறமிருக்கையில் அன்றாட வாழ்வியல் மணித்தியாலங் களை கொண்டு நகர்த்துவதற்கே முடி யாத அளவிற்கு அச்சமான சூழலொன்றே நிலவி வருகின்றது. அரசியல்தீர்வு, அபி விருத்தி என்பன கானல் நீராகிவிட்ட நிலையில் கலாசாரம், பண்பாடு என்பன தடம் தெரியாது போவதற்குரிய நடவடிக்கைகள் திட்டமிட்டு சிதைக் கப்பட்டுக்கொண்டிருக்கையில் எமது எதிர்காலமே கேள்விக்குட்பட்டுள்ளது.

கணவனை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக் கப்படும் சிறார்கள், கொலை செய் யப்படும் சிறார்கள் இப்படி பட்டியல் நீண்டுகொண்டு செல்கின்றது. இவற்றின் வலிகளை திருமதி விஜயகலா நேரில் பார்த்துள்ளார். அதனை அவர் பெண் என்ற அடிப் படையில் உணர்ந்துள்ளார். அவர் களின் எதிர்காலத்திற்கு ஏதாவது செய்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைச்சுப் பதவி யினை பொறுப்பேற்ற போதும் அதன் ஊடாக எவ்விதமான செயற்பாடு களையும் முன்னெடுப்பதற்கு அவ ருக்கு இயலவில்லை.

நன்மை பயக்கும் எந்த நடவடிக் கைகளை எடுத்தாலும் பெண் அமைச்சராக இருப்பதால் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆயிர மாயிரம் தடைகள் உருவாக்கப்படு கின்றன. இவ்வாறான பல்வேறு நெருக்கடியான நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகளை அவர் நினைவுபடுத்தி யுள்ளார்.

ஒரு மனிதன் தனது சிந்தனை யில், அனுபவத்தில் எழுகின்ற கருத்துக்களை முன்வைப்பதற்கு இடமுள்ளது. அது அடிப்படை உரிமை என்பதுடன் ஜனநாயகப் பண்பு களில் மிகவும் முக்கியமானது மாகும். விடுதலைப்புலிகளின் கட்டுக்கோப்பான ஒழுக்கங்கள், செயற்பாடுகளைப் பற்றி பேசுவதில் என்ன தவறுள்ளது.

விடுதலைப் புலிகள் செயற்பட்ட சமகாலத்தில் வாழ்ந்த அனை வருமே அந்த விடயங்களை நன்கு அறிவார்கள்.

செயல் வடிவம் கொடுப்பதற் கான நடவடிக்கைகளை எடுத்தால் தான் அது அரசியலமைப்பினை மீறுவதாக அமையும். உதாரண மாக இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்தாலும் அங்கு அந்த அமைப்பினைப்பற்றி, தலை மையைப் பற்றி, செயற்பாடுகள் பற்றி அனைவரும் பேசுகின்றார் கள். இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளது போன்று அங்கும் குண்டர் சட்டம் உள்ளது.

விடுதலைப்புலிகள் பற்றி பேசு பவர்கள் மீது குண்டர் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வில்லையே. ஏனென்றால் விடு தலைப்புலிகள் பற்றி பேசுபவர்கள் அதற்கு செயல் வடிவம் கொடுக்க வில்லை. அதுபோன்று தான் விஜயகலா மகேஸ்வரனும் எண் ணப்பாட்டு ரீதியாக கருத்துக்களை முன்வைத்துள்ளாரே தவிர செயற் பாட்டு ரீதியாக எதனையும் செய்ய வில்லை.

எனவே அவர் மீது நடவடிக்கை எடுப்பது என்பது ஜனநாயகத் தினை மீறும் செயற்பாடாகும் என் பதோடு ஒரு பெண் அரசியல் வாதியை திட்டமிட்டு நசுக்குகின்ற முயற்சியாகவே பார்க்கவேண்டி யுள்ளது என மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# விஜயகலா மீது...

அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகள் குறித்து தெரிவித்த கருத்துத் தொடர்பில் பொலிஸ் தலைமைய கத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பான விசாரணை நடவடிக் கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த முறைப்பாடு குற்றப்புலனாய்வு பிரிவிற்கு அனுப்பப் பட்டுள்ளது.

இதன்படி குற்றப் புலனாய்வுப் பிரி வின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் குறித்த விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத் துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல63 சிவன் வடக்கு வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.
இம் முறை உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கும் தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கான
தொழினுட்பச் செயலமர்வு
➢ 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில்
➢ தொழினுட்பப்பிரிவில் அனைத்துப் பாடங்களும்
➢ அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்
➢ இறுதிச் சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்
மேலதிக விபரங்களுக்கு 077 2487774

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org